
# புள்ளடியின் பலம்
කතිරයේ බලය

தொகுதி 4 இதழ் 1-2 தேர்தல் ஆணைக்குழு ஜனவரி – ஆகஸ்ட் 2020

# பாராளுமன்றத் தேர்தல்கள் 2020


சன்ன பி த சில்வா
பணிப்பாளர், ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்


## அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் ( 2 ) (இ) உப உறுப்பரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியமைப்பின் 70 ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமை 2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்து அதிமேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், பாராளுமன்றத் தேர்தல்களை 2020 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்துவதற்காக, மார்ச் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை 22 தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் கையேறக்பப்பட வேண்டியிருந்தது.

பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட முலதாவது பாராளுமன்றத் தேர்தல் இந்தத் தேர்தலாகும்.

இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது நாடு முகம் கொடுத்திராத ஊழுஏஐனு – 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக இந்தப் பாராளுமன்றத் தேர்தல்களை 1981 ஆம் ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 (3) ஆம் பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது அதாவது, 2020.04.20 ஆந் திகதிய 2172/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரம் மூலம் யூன் 20 ஆந் திகதியும், 2179/17 ஆம் இலக்க 2020.06.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரம் மூலம் 2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதிக்கும் பிற்போடுவதற்கு நேரிட்டது, தொற்றுநோய்க் கட்டுப்பாட்டு சுகாதார வழிகாட்டல்களின் கீழ் தேர்தல் அலுவல்களை ஏற்பாடு செய்ய நேரிட்ட காரணத்தால் வாக்ளிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதருகின்ற வாக்காளர்களுக்க மற்றும் வாக்கெடுப்பு நிலைய பணியாட்குழுவினருக்கும் பின்பற்ற வேண்டியேற்படுகின்ற விசேட செயற்பாடுகள் காரணமாக வாக்காளர்களுக்கு எற்படக்கூடிய காலதாமதத்தை தவிர்ப்பதற்காக வாக்களிப்புக் காலத்தையும் மு.ப.7. 00 தொடக்கம் பி.ப. 5.00 வரை மேலதிகமாக ஒரு மணித்தியால காலம் வழங்கப்பட்டது.

## 2. தேர்தல் சட்டம்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் மூலம் இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு, 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் போது நான்கு அரசியல் அமைப்புத் திருத்தங்கள் மற்றும் 05 தேர்தல் சட்டத் திருத்தச் சட்டமூலங்களினால் குறித்த தேர்தல் சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

## 3. தேருநர் இடாப்பு மற்றும் தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை.

பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், தேர்தலொன்று நடாத்தப்படுதலை தேவைப்படுத்தும் பிடகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட தினத்தில் நடைமுறையிலுள்ள தேருநர் இடாப்பு உரிய தேர்தலுக்காக செல்லுபடியாகும் என்பதால், இந்தப் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படவுள்ளதான கட்டளை வெளியிடப்பட்ட தினமாகும் போது நடைமுறையில் காணப்பட்ட 2019 ஆண்டின் தேருநர் இடாப்பு, 2020.01.24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர் அரசியல் யாப்பின் 98 (8) உறுப்புரைக்கமைய, தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் ஆணைக்குழுவினால் 2164 /9 ஆம் இலக்க 2020.02.24 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரம் மூலம் வெளியிடப்பட்டது. அந்த அறிவித்தலின் பிரகாரம் 22 தேர்தல் மாவட்டங்களுக்காக இந்தத் தேர்தலில் போது தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறானதாகும்.

| தேர்தல் மாவட்டத்தின் பெயர் | தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 19 |
| கம்பஹா | 18 |
| களுத்துறை | 10 |
| மஹநுவர | 12 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 08 |
| காலி | 09 |
| மாத்தறை | 07 |
| அம்பாந்தோட்டை | 07 |
| யாழ்ப்பாணம் | 07 |
| வன்னி | 06 |
| மட்டக்களப்பு | 05 |
| திகாமடுல்லை | 07 |
| திருகோணமலை | 04 |
| குருணாகல் | 15 |
| புத்தளம் | 08 |
| அனுராதபுரம் | 09 |
| பொலன்னறுவை | 05 |
| பதுளை | 09 |
| மொனராகலை | 06 |
| இரத்தினபுரி | 11 |
| கேகாலை | 09 |
| **மொத்தம்** | **196** |

இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்காக 2019 ஆண்டின் செல்லுபடியான தேருநர் இடாபப்புக்கு அமைய 16,263,885 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

### 4. பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல்.

பெயர் குறித்த நியமங்களைக் கையேற்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 2020 மார்ச் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 வரை 22 தேர்தல்கள் மாவட்டங்களுக்காக, அரசியல் கட்சிகளினால் 339 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் 358 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அதில் அரசியல் கட்சிகளுக்குரிய 304 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் மற்றும் சுயேச்சை குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 313 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 7452 ஆகும்.

பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்க்கப்படும் காலப்பகுதியின் நிறைவில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு அவற்றின் சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கு அனுமதிக்கப்பட்ட சின்னங்கள் குறித்தொதுக்கப்பட்டு, அதன் பின்னர் வேட்பாளர்கள் அனைவருக்கும் ,பெயர் குறித்த நியமனப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அவர்களது பெயர்களின் சிங்களமொழி அகரவரிசை தொடரொழுங்கில் அவர்களை வேறுபிரித்துக் கண்டறிவதற்காக தொடர் இலக்கங்கள் குறித்தொதுக்கப்பட்ட பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு அமைய 'வாக்கொடுப்பு பற்றிய அறிவித்தல்' தேர்தல் ஆணைக்குழுவினால் 2179/7 ஆம் இலக்க மற்றும் 2020.06.09 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அந்த அறிவித்தலுக்கமைய 12,774 வாக்கெடுப்பு மாவட்டங்களின் மொத்த வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12,985 ஆகுமென்பதோடு அவ்வெண்ணிக்கையில் 213 வாக்களிப்பு நிலையங்கள் பெண் வாக்காளர்களுக்காகக் குறித்தொதுக்கப்பட்டன.

வேட்பாளர்களை வேறுபிரித்தறியும் இலக்கங்கள் உள்ளடக்கப்பட்ட அறிவித்தலொன்று அச்சிடப்பட்டு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டடையுடன் தபாலில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அந்த அறிவித்தல் பத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 7,087,400 ஆகக் காணப்பட்டது.

### 5. தேர்தல் ஒழுங்கமைப்பு பணிகளில் தாக்கம் செலுத்திய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை

முழு உலகையும் முடங்கச் செய்த கொவிட் 19 உயிர்கொல்லி வைரஸ் உடம்பில் தொற்றிய முதலாவது இலங்கை நோயாளி 2020 மார்ச் மாதம் 11ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டார். இத்தினத்திற்கு அடுத்த தினம் 2020 பாராளுமன்ற தேர்தலுக்கான பெயர்குறித்த நியமனப் பத்திரங்களை எற்றுக்கொள்வதற்கான காலப்பகுதி ஆரம்பமாகும் என அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கொவிட் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக மேற்படி நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக பொதுமக்கள் ஒன்றுகூடுவதை வரையறை செய்தல், அன்றாடத் தமது பணிகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கிடையில் சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் அடிக்கடி கைகளைக் சுத்தம் செய்தல் என்பன நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய உடனடியாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளாக உலக சகாதார அமைப்பினால் அறிவிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினாலும் உரிய சகல தரப்பினர்களையும் ஒன்றுகூட்டி கொவிட் கட்டுப்பாட்டு செயலாற்றுகை படையணியொன்று தாபிக்கப்பட்டதோடு அதற்காக பொதுமக்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்காக தேசிய செயற்பாட்டு நிலையமொன்றும் தாபிக்கப்பட்டது. அதற்கமைய உலக சுகாதார அமைப்பு மற்றும் அதுதொடர்பான விசேட அறிவுடைய அமைப்புக்கள்/ உத்தியோகத்தர்களினால் நோய் பரவல் கட்டுப்பாடுக்காக தேவையான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டு அதற்காக விரிவான பிரச்சாரமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்த ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு மத்தியில் தேர்தலுக்கான பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரிட்டது. பெயர் குறித்த நியமனங்களை ஏற்றுக் கொள்ளும் காலப்பகுதியின் போது சாதாரண நாட்கள் பல அரசாங்கத்தினால் விசேட விடுமுறை நாட்களாக பிரகடனம் செய்தல், அத்தியவசிய சேவைகள் வழங்குகின்ற அலுவலகங்கள் மூடப்படல், அதிகமான அரச அலுவலகங்கள் தற்காலிகமாக பொது மக்களுக்காகத் திறக்கப்படாமை, பொதுப் போக்குவரத்து மற்றும் பயணங்கள் வரையறைக்கப்பட்டமை போன்ற அரசாங்கத்தினால் நாட்டுக்கும் பயனுறுதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் மத்தியில் தேர்தலுக்கான பூர்வாங்க பணிகளை ஏற்பாடு செய்ய வேண்டியேற்பட்டது. பெயர்குறித்த நியமனங்களை ஏற்றுக் கொள்ளும் காலப்பகுதிக்குள் கொவிட் - 19 தொற்றுநோய் கட்டுப்பாட்டக்கான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுதல் அரசாங்கத்தினால் கட்டாயமாக்கப்பட்டிருந்தமை காரணமாகவும் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் பெயர்குறித்த நியமனங்களைக் கையளித்த சகல கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களிடம் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய அவர்களால் பெயர்குறித்த நியமன காலப்பகுதியன் பின்னர் வழமையாக நடாத்தப்படுகின்ற பொதுக் கூட்டங்கள், பாதயாத்திரைகள் அல்லது வாகனப் பேரணிகள் எதுவும் நடாத்தப்படவில்லை.

பெயர்குறித்த நியமனங்களைக் கையேற்றம் பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் காரியாலயங்களில் மற்றும் தேர்தல்கள் காரியாலயங்களில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் தொற்றுக்நோய்க் கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்கமைய மட்டுப்படுத்துவதற்கு நேரிட்டது. எனினும் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர் கட்டாயமாக தேர்தல் கடமைகளில் ஈடுபட்டதோடு அலுவலக உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தேர்தல் பூர்வாங்க ஒழுங்கமைப்பு கடமைகளுக்கான அழைக்கப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில் அரசின் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை உச்ச வகையில் பேணுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு பொதுமக்கள் தேர்தல் அலுவலகங்களுக்கு வருகை தருவதும் கட்டுப்படுத்தப்பட்டது. தேர்தலுக்காக மீண்டும் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அன்றாட பொது நடவடிக்கைகளுக்காக நாட்டைத் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து தேர்தலுக்கான பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகள் அதற்கமைய விரைவு படுத்தப்பட்டன அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் பரிசீலித்தல், பெயர்குறித்த நியமனங்கள் தயாரித்தல், அஞ்சல் வாக்கு சீட்டுக்கள் விநியோகம், சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் 3 ஆகியவற்றுக்கு அறிவுறுத்தல் வகுப்பு நடத்துதல் மற்றும் அங்சல் வாக்கு அடையாளமிடல் நடவடிக்கைகள் கொவிட் 19 தொற்றுஆநோய்க் கட்டுப்பாட்டு சகாதார வழிகாட்டல்களின் படி இடம்பெற்றது. அதற்கு மேலதிகமாக தேர்தலின் அடிப்படையான மற்றும் முக்கியமான பணியொன்றான உத்தியோகத்தர்களைப் பயிற்சியளித்தலை மிகவும் குறுகிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நேரிட்டதோடு அதற்காக சுகாதார வழிகாட்டல்களின் படி செயற்படுதல் அசௌகரியமான மற்றும் சவாலமிக்க பணியொன்றாகக் காணப்பட்டது. முனனைய தேர்தல்களின் போது ஓர் அறிவுறுத்தல் வகுப்பிற்கு 100 - 150 உத்தியோகத்தர்கள் வரை அழைக்கப்பட்டதோடு இந்தத் தேர்தலின் போது சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவதற்கு ஏற்பட்ட காரணத்தால் அதனை 50 உத்தியோகத்தர்கள் வரை மட்டுப்படுத்துவதற்கு நேரிட்டது. இதன் காரணமாக இம்முறை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துவதற்க அதிகமான காலப்பகுதி ஒன்றை ஒதுக்கீடு செய்ய வேண்டியேற்பட்டது.

அவ்வாறே வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்கள் விநியோகிக்கும் மற்றும் அவற்றை மீண்டும் கையேற்கும் இடங்கள், வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்தலும் கொவிட் கட்டுப்பாட்டு சுகாதார

வழிகாட்டல்களுக்கமைய மேற்கொள்வது கட்டாயமாகக் காணப்பட்டது. நாட்டில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தொற்றுநோய் பரவும் அபாயம் முழுமையாக குறைவடையவில்லை. தேர்தல் என்பது அதிகளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு அடைந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத கூட்டு முயற்சியொன்று என்பதால் நோய்க்காவி வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முடியுமான முன் ஏற்பாடுகளை மேற்கொள்வது தேர்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களின் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் பொறுப்பாகக் காணப்பட்டது. அதற்கமைய வாக்கெடுப்பு நிலையங்களுக்கு பொருட்கள் விநியோகம், அவைகளை மீண்டும் கையேற்றல் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்கள் முன்னைய தேர்தல்களை விடக் குறைவான உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையொன்றின் மூலம் நிர்வகிக்கக்கூடிய விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதனால் விநியோகித்தல், கையேற்றல் சகிதம் வாக்கெண்ணல் மண்டபங்களின் எண்ணிக்கை என்பன அதிகரித்ததோடு தேர்தல் செலவுகள் அதிகரிப்பதற்கும் அது காரணமாக அமைந்தது .

அரச பிரிவின் நிர்வாகம் மற்றும் மக்களின் வாழ்க்கைநிலை சாதாரண நிலைக்கு மாறிவருகின்ற சந்தர்ப்பமொன்றில் தேர்தலை நடாத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு நேரிட்ட காரணத்தால் இந்த நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் பொருட்டு தேர்தலுக்குரிய பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு இடமும் முழுமையாக தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. அந்த நிலையங்களுக்கு உட்பிரவேசிக்கும் சகலரதும் உடல் வெப்பத்தை அளவிடுதல், அவர்களின் கைகளைக் கழுவுதல் மற்றும் தொற்றுநீக்க செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய உத்தியோகத்தர்கள் நேருக்கு நேர் சந்திப்பதைத் தடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கும் வாய்மூடிகள், முகக்க் கவசங்கள் மற்றும் கிருமி தொற்று நீக்கித் திரவம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களின் கடமை நிலையங்களை பொலித்தீன் கொண்ட காட்போட்டைப் பயன்படுத்தி மறைக்கப்பட்டது. வாக்கெடுப்பின் கட்டாயத் தேவைப்பாடொன்றான வாக்காளர்களை தோதான குறியீட்டினால் அடையாளமிடுவதற்காக ஒவ்வொரு வாக்காளருக்காகவும் தனித்தனியான விசேட குச்சொன்று பயன்படுத்தப்பட்டது. வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கை அடையாளமிடுவதற்கு வழங்கப்படும் காபன் பேனை, ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை தொற்றுநீக்கம் செய்யப்பட்டது. அவ்வாறே வாக்கை அடையாளமிடுவதற்காக, தனது நீல அல்லது கருப்பு நிற குமிழ்முனைப் பேனைவொன்றை எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வாக்காளர்களிடம் கோரப்பட்டது. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு உட்பிரவேசிக்கும் போது, வாக்கெடுப்பு நிலையத்தினுள் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் போது மூன்று தடவை வாக்காளர்களுக்கு தொற்றுநீக்கம் செய்வதற்கான வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் பயன்பாட்டின் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்திலேயே அழிப்பதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த தேரதலின் போது சுகாதார வழிகாட்டல்களை மேற்கொள்ளல், அவை உரிய முறையில் உரிய தரப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதைக் மேற்பார்வை செய்யும் பொறுப்பு, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையிலான சுகாதாரப் பிரிவின் ஊழியர்களுக்கு கையளிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் சுகாதார பிரிவின் உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டதோடு, வலய மட்டத்தில் அந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த சுகாதார பணியாட்குழுவினரின் மேற்பார்வையின் கீழ் குறித்த பிரதேசங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட வாக்காளர்களுக்காக, வாக்கெடுப்பு நிலையங்களில் தனியான வாக்களிப்பு சிற்றறையொன்று, வாக்களிப்பதற்காக வழங்கப்பட்டது.

கொவிட் தொற்றுநோயக் கட்டுப்பாடுக்காக, தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் அனைவரதும் பாராட்டுதல்களுக்கும் மற்றும் வாழ்த்துக்களுக்கும் உட்பட்டிருந்ததென்பதை கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 6. அஞ்சல் மூலம் வாக்களித்தல்.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (3) ஆம் பிரிவிற்கமைய, பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியின் பின்னர் வருகின்ற 7 ஆம் நாள் தொடக்கம் 14 ஆம் நாள் வரை தெரிவத்தாட்சி அலுவலர்கள் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் வேண்டும்.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகைமை பெறுகின்ற தரப்பினர்கள் யாவர் என்பது, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (2) பிரிவில் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு, பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் அலுவலர்களுக்கு, சிறைச்சாலைத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு , புகையிரத, அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்புகள் ஆகிய திணைக்களங்களின் பணியாட்குழுவினருக்கு, இலங்கை போக்குவரத்துச் சபையின் பணியாட்குழுவினருக்கு , தேர்தல் கடமைகள் கையளிக்கப்படுகின்ற அரசாங்க அல்லது மாகாண சேவையின் அலுவலர்கள் மற்றும் வசிக்கின்ற மாவட்டம் தவிர்ந்த

ஏனைய நிர்வாக மாவட்டமொன்றுக்காகப் தேர்தலில் போட்டியிடுகின்ற வாக்காளர்களுக்கு, இந்த வசதியைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பதாரிகள் தமது பதிவு விபரங்களை தேருநர் இடாப்பில் பரீட்சித்துப்பார்த்துப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். அப்பணிகளை இலகுபடுத்துவதற்காக தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களின் வாக்களிப்புக்குரிய தேருநர் இடாப்புக்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்களில் அந்த ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களின் அதிகமானோர் இருக்கின்ற பொது நிருவாக அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தொழிலாளர் செயலகம், கல்வி அமைச்சு, பதிவாளர் நாயகத் திணைக்களம், அஞ்சல் தலைமையகம், கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, செத்சிரிபாய முதலாம் கட்ட அலுவலகத் தொகுதி ஆகிய கொழும்பு மாவட்டத்தின் அரச அலுவலகங்கள் அமைந்துள்ள வளாகங்களிலும் தேருநர் இடாப்புக்களைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்புப் பிரிவு அங்கத்தவர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் நாடு முழுவதும் அமையப்பெற்றுள்ள கடமை நிலையங்களில் சேவையாற்றுகின்றமையினால், முப்படையினருக்கு மற்றும் பொலிஸாருக்குரிய சேவை நிலையங்களில், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்கின்றவர்களின் பதிவுத் தகவல்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக, இறு வட்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பு பிரதிகள், தேர்தல்கள் செயலகத்தினால் அந்தச் சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொள்வதற்குரிய வசதிகள் ஏற்பாடுசெய்து கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலகத்தில் இந்தத் தகவல்களை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டிருந்த விசேட தொலைபேசியூடாக 1919 அரச தகவல் மையத்தின் மூலம் உரிய ஆட்களுக்கு தேருநர் இடாப்பின் தமது பதிவு விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்போர் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கீழ் தனது சேவை நிலையங்களில் விடுமுறை பெற்றுக் கொண்டு வாக்களிப்பதற்காக அவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக 2020.07.15 ஆம் திகதி மும்மொழிகளிலும் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் போது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்றல் 2020.03.06 ஆம் திகதி ஆரம்பித்து, 2020.03.16 ஆம் திகதி நள்ளிரவு

12.00 மணிக்கு நிறைவு செய்யப்படவிருந்தது. எனினும் எதிர்பாராத விதமாக முகம்கொடுக்க நேரிட்ட கொவிட் 19 தொற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் அதாவது அரசாங்க விடுமுறை நாட்கள் மற்றும் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் என்பன காரணமாக வாக்கெடுப்புத் திகதி இரண்டு சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை கையேற்கும் திகதிகளையும் ஒத்திவைப்பதற்கு நேரிட்டது. அதற்கமைய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் கிடைக்கப்பெற்றிருந்த அனைத்து விண்ணப்பங்களையும் 2020.05.14 ஆம் திகதி பி.ப. 4. 00 வரை கையேற்றுக்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அது தொடர்பாக விரிவான ஊடகப் பிரச்சாரமொன்றை மேற்கொள்வதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் அனைத்து அலுவலர்களுக்கும் அதற்காக விண்ணப்பிப்பதற்கு போதுமானளவு காலப்பகுதி அவசியம் என்பதனால் அஞ்சல் வாக்களிப்பு வசதிக்காக விண்ணப்பிக்கும் காலப்பகுதிகளை திருத்தம் செய்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகக் காணப்பட்டது.

எதிர்பாராதவிதமாக நாட்டில் வேகமாகப் பரவிய கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் முழுமையான பொறுப்பு சுகாதார சேவைபட பணியாளர்களுக்கு நேரடியாகக் கையளிக்கப்பட்டதுடன் அதனோடு இணைந்ததாக அனைத்து அரச மற்றும் தனியார் வழங்கல்களும் பல்வேறு மட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. அதற்காக 24 மணி நேரமும் சுகாதார சேவை ஊழியர்கள் தமது பங்களிப்பைக் குறைவின்றி வழங்கி கொவிட் தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வாக்காளர்களின், தேர்தல் பணியாட்குழுவினர் ஆகியோரின் சுகாதாரப் பாதுகாப்பை பேணிக்கொண்டு தொற்றுநோய் கட்டுப்பாட்டு சட்ட திட்டங்களின் கீழ் வாக்களிப்பை நடத்துவதற்காக சுகாதார சேவைப் பணிக்குழுவினரின் உதவியைப் பெற்றுக் கொள்வது கட்டாயத் தேவைப்பாடொன்றாகக் காணப்பட்டது. நாட்டில் கொவிட் தொற்றுநோய் கட்டுப்பாட்டு பொதுமக்கள் சுகாதாரத்தை முறைப்படி பேணிச்செல்லல் மற்றும் வாக்களிப்பை நடாத்தும் பணிகளுக்காக சுகாதார சேவைப் பணியாட்குழுவினரையும் சேவையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளதால் இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போது சுகாதார சேவை பணிக்குழு அங்கத்தவர்களுக்கும் முதல் தடவையாக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இந்த வசதியை வழங்குமாறு நீண்ட காலமாக சுகாதாரத் துறை பணியாட்குழுவினர் தேர்தல் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. அதற்கமைய சுகாதாரத் துறை பணியாட்குழுவினருக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கையேற்றல் 2020.05.21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2020.06.08 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடைந்தது.

1959 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் ( திருத்தச் ) சட்டத்தால் அஞ்சல் மூலம் வாக்களித்தல் வசதி அறிமுகம் செய்யப்பட்டதோடு, பின்னர் ஆமற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் இந்த வசதிகள் பல்வேறு பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டது. இந்தத் தேர்தல் சந்தர்ப்பமாகும் போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கேரியிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 07 இலட்சத்தை விட அதிகமாகக் காணப்பட்டது.குறித்த அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் கொவிட் 19 உலக தொற்றுநோய் நிலைமை காரணமாக பல தடவைகள் பிற்போடுவதற்கு நேரிட்டமையினால், 2020.06.08 ஆம் திகதி வரையும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளுக்காக விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 753,476 ஆகக் காணப்பட்டதோடு, அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 705,505 ஆகும். அதிகமான அஞ்சல் மூல வாக்காளர்களான 76,944 பேர் பதிவு செய்யப்பட்டிருந்த தேர்தல் மாவட்டம் இலக்கம் 15 குருணாகல் தேர்தல் மாவட்டமாகும்.

கணனிமயப்படுத்தப்பட்டுள்ள (கணனியில் உட்சேர்க்கப்பட்டுள்ள) தேருநர் இடாப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் வாக்காளர்களின் தரவுகளைப் பெற்றுக்கொண்டு, குறித்த அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றை கணனிமயப்படுத்தி (கணனியில் உட்சேர்த்து) , மேற்படி தரவுகளின் உதவியோடு அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்பைத் தயாரிப்பதற்கும், அந்த இடாப்பை அச்சிட்டுப் பிரதிகளையெடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. இது தொடர்பான தேவையான கணனி மென்பொருள் மற்றும் அறிவுறுத்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழிநுட்பப் பிரிவின் மூலம் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதி உறைகளை உரிய அலுவலர்களுக்கு துரிதகதியில் அனுப்புவதற்கும் அடையாளமிடப்பட்ட உறைகளை மீண்டும் வரவழைத்துக் கொள்ளல் தொடர்பாகவும் அஞ்சல் மா அதிபர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடி முறையான திட்டம் வகுக்கப்பட்டது.

அஞ்சல் வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் ( இடாப்பு) 2020 யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதோடு, அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகம் மற்றும் அஞ்சலுக்கு ஒப்படைத்தல் 2020 யூன் மாதம் 30, யூலை மாதம் 01, 02 ஆகிய திகதிகளில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன.

அஞ்சல் வாக்குகளை அடையாளமிடப்படுகின்ற அனைத்து அரச மற்றும் நியதிச்சட்ட சபைகள் / பாதுகாப்பு பிரிவின் கடமை நிலையங்களில் கொவிட் 19 தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பான கண்காணிப்பு அலுவல்கள் 2020 யூலை 14,15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நேரடியாக சுகாதார மருத்துவ அலுவலர் காரியாலயங்களின் பணிக்குழுவினருக்கு கையளிக்கப்படுகின்றமையினால் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களில் மாத்திரம் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் 2020.07.13 ஆம் திகதியும், அரச நிறுவனங்களில் ( மாவட்டச் செயலாளர் அலுவலகம், தேர்தல்கள் அலுவலகம், பொலிஸ், பாதுகாப்புப் படையினர், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சுகாதாரப் பிரிவு தவிர்ந்த ) அஞ்சல் வாக்குகள் அடையாளமிடல் 2020.07.14 மற்றும் 15 ஆகிய தினங்களிலும், மாவட்டச் செயலாளர் அலுவலகம், தேர்தல்கள் அலுவலகம், பொலிஸ், பாதுகாப்புப் படையினர், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சுகாதாரப் பிரிவுகளில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடல் 2020.07.16 மற்றும் 17 ஆம் திகதிகளிலும், இந்த நாட்களில் அஞ்சல் வாக்குகளை அடையாளமிட முடியாமல் போன அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு 2020.07.20,21,24 மற்றும் 25 ஆம் திகதிகளில் தனது சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள மாவட்டத்தின், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியாகும் போது, அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனைப் பிரதேசத்தில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை பரவலடைதல் காரணமாக அந்தப் பிரதேச அரச அலுவலகங்களை மூடுவதற்கு நேரிட்ட காரணத்தால் அந்த அலுவலகங்களின் பணியாட்குழுவினருக்கு 2020.07.29 ஆம் திகதி அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. மேலும் மேற்குறித்த தினங்களில் அஞ்சல் வாக்குகளை அடையாளமிட முடியாமல் போன, அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களிடமிருந்த கிடைத்த தகவல்கள் மற்றும் அலுவலர்களுக்கு கிடைத்த தகவல்களின் படி கொவிட் தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்துலுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் மற்றும் குறித்த காலப்பகுதியில் இளைப்பாறிய நபர்களின் பெயர்களை அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்பிலிருந்து அகற்றிவிட்டு (நீக்கிவிட்டு), அந்த நபர்களுக்கு வாக்கெடுப்புத் தினம் தமது வாக்களிப்பு நிலையத்தில்

வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

## 7. வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்குதல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ ஆம் பிரிவின் பிரகாரம் தான் வாக்காளரொருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள பிரதேசத்திற்குச் சென்று வாககளிப்பதற்கு, அத்தகைய பிரதேசங்களில் காணப்படுகின்ற நிலைமைக்கேற்ப அச்சம் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு, அவர்கள் தற்போது வசிக்கின்ற பிரதேசங்களிலேயே வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமைகளைக் கொண்டவர்கள், இந்த தேர்தலுக்குரிய பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட 2020.03.02 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் உரிய விண்ணப்பப் படிவங்களைத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு பத்திரிகை விளம்பரம் மற்றும் ஊடக அறிவித்தல் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. மேற்படி அறிவித்தலுக்கு ஏற்ப கிடைக்கப்பெற்ற பதில்களின் அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாத நபர்களுக்காக வாக்களிப்பதற்காகக் குறித்தொதுக்கி வழங்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

**தேர்தல் மாவட்டம் 11 – வன்னி**

| கிராம அலுவர் பிரிவு | தேர்தல் மாவட்டம் | | | வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா | | |
| 593 – புளிச்சாக்குளம் | 169 | – | – | பு/உமர் பாறுக் மஹா வித்தியாலயம் – ( மண்டப இல –03) புளிச்சாக்குளம் | 227 |
| 593/பி– தாருகுடிவில்லு | 58 | – | – | | |
| 598/சீ – பெருக்குவட்டவான் | 13 | | | பு/கல்/ரிஸ்வான் அரசினர் முஸ்லிம் வித்தியாலயம் – கரம்ப | 857 |
| 603/ஏ – கரம்பை | 839 | 3 | 2 | | |
| 606 – மணல்தீவு | 591 | – | – | பு/ வேப்பமடு முஸ்லிம் மஹா வித்தியாலயம் | 591 |
| 607/டி – பொத்துவில்லு | 215 | – | – | பு.ஹிதாயத்நகர் முஸ்லிம் மஹா வித்தியாலயம | 604 |
| 608/பி – வீரபுர | 378 | 11 | – | | |
| 617/பி – புத்தளம் நகர் கிழக்கு | 89 | – | – | பு/ ஆப்தீன் அரசினர் முஸ்லிம் மஹா வித்தியாலயம் | 328 |
| 617/சீ – மரிக்கார் வீதி | 237 | – | – | | |
| 617/எப்– புதுகுடியிருப்பு | 2 | – | – | | |
| 618/ஏ – தஜல்லையடி | 106 | – | – | ஆபிதா பாலர் பாடசாலை – அல் காசிம் சிட்டி – ரத்மல்யாய | 485 |
| 618/பி – ரத்மல்யாய | 377 | – | 2 | | |
| 621/ஏ – நொரச்சேலை | 482 | 126 | – | பு/ கொய்யாவாடி முஸ்லிம் மஹா வித்தியாலயம் – மண்டப இல – 01 | 608 |
| 622/ஏ – ஆலங்குடா | 410 | 300 | 1 | பு/ கொய்யாவாடி முஸ்லிம் மஹா வித்தியாலயம் – மண்டப இல – 02 | 711 |
| 624 – திகலி | 193 | – | – | பு/கல்/திகலி முஸ்லிம் மஹா வித்தியாலயம இ திகலி | 412 |
| 626 – முதலைப்பாலி | 219 | – | – | | |
| 628 – முசல்பிட்டி | 13 | – | – | பு/கல/ அல் கரம் முஸ்லிம் ஆரப்ப் பிரிவு வித்தியாலயம் | 726 |
| 628/ஏ – பள்ளிவாசல்துறை | 502 | – | – | | |
| 629/ஏ– கந்தகுளி | 122 | – | – | | |
| 629/பி – குரிஞ்ஜம்பிட்டி தெற்கு | 89 | – | – | | |
| 630/ஏ – புதுக்குடியிருப்பு | 102 | – | – | பு/ஜயுப் அரச முஸ்லிம் மஹா வித்தியாலயம் | 585 |
| 630/பி – வன்னி முந்தலம் | 13 | – | – | | |
| 630/சீ – மண்டலகுடா | 447 | 23 | – | | |
| 635/4 – கரதீவு வடக்கு | 19 | – | – | பு/வட்டக்கண்டல் முஸ்லிம் மஹா வித்தியாலயம் – மண்டப இல – 03இ வட்டக்கண்டல் | 141 |
| 637 –வட்டகண்டல் | 122 | – | – | | |

## 8. உடல் வலிமையிழப்புக்குற்பட்ட வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 40 (2) பிரிவின் பிரகாரம் 2020.08.05 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போது முற்றாக அல்லது பகுதியளவிலான கட்புலப் பாதிப்பு அல்லது ஏதேனும் ஒரு உடல் வலிமையிழப்புக்குற்பட்ட வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் ஏற்றவகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென அறிவித்து பத்திரிகை அறிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

## 9. உடல் வலிமையிழப்புக்குற்பட்ட ஆட்கள் மூலம் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் 83 (4) (ஈ) பிரிவின் பிரகாரம், ஏதாவதொரு உடற்றகுதியீனம் காரணமாக எவரேனும் ஆளொருவருக்கு நடந்து அல்லது இலங்கை பொதுப் போக்குவரத்து சபையின் அல்லது ஒரு பிராந்திய போக்குவரத்துச் சபையின் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத சேவையின் அல்லது வேறு பொதுப் போக்குவரத்து சேவைகள் மூலம் வழங்கப்படுகின்ற போக்குவரத்து சேவை மூலம் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று, திரும்பி வர முடியாதெனில், தனக்கு வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்காக மாற்று போக்குவரத்து வசதிக்காக தனது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அனுமதிபெற்றுக் கொள்ளக்கூடிய முறை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது. வாக்களிப்பு நிலையத்திற்கு செல்று வருவதற்காக தனது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அந்த ஆள் மூலமாகவோ அல்லது அவ்வாறு இல்லையெனின் அந்த ஆள் சார்பாக ,வேட்பாளரொருவர், வாக்களிப்பு முகவரொருவர், அதிகாரமளிக்கப்பெற்ற முகவரொருவர், பிரதேச முகவரொருவர் அல்லாத வேறு எவரேனும் ஆள் ஒருவரினால் விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் இந்த வசதிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் , தினங்களுக்கு முனனர் அதாவது 2020 யூலை 29 ஆம் திகதி அல்லது அதற்கு முனனர் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் சமர்ப்பித்தல் சட்டரீதியான தேவைப்பாடொன்றெனப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திப்படும் பட்சத்தில், மேற்படி ஆளுக்கு விசேட போக்குவரத்து வசதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்க முடியும் என்பதை அறிவித்து பத்திரிகை மற்றும் ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

## 10. தற்காலிக அடையாள அட்டைகள் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்.

1981 பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 27 (1) ஆம் உட்பிரிவிற்கமைய தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு தேருநர்களின் பெயர்கள், தேருநர்களுக்காக குறிதொதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையமும் வாக்களிப்பு நடைபெறும் திகதியும் மற்றும் நேரமும் ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் வாக்கெடுப்பு தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு - உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றின் ' மூலம் அறிவித்தல் வேண்டும். இந்தத் தகவல்களை அறிவிப்பதன் தேவைப்பாடு 1946 இலங்கை (பாராளுமன்ற தேர்தல்கள்) கட்டளைச் சட்டத்திற்கு, 1959 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் தேர்தல்கள் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ள தேருநர் இடாப்பின் தகவல்களின் உதவியோடு அச்சிடப்பட்டதோடு அவ்வட்டைகள் அஞ்சல் செய்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. அட்டைகளை

அசச்சிடும் தற்போதைய வழிமுறை தேர்தல் செயற்பாட்டின் எஞ்சிய ஒரு நடவடிக்கையாகக் குறிப்பிடலாம். 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் தேசிய அடையாள அட்டையை, வாக்குச் சீட்டொன்றை வாக்காளர் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்தில் சமர்ப்பிக்கவேண்டிய சட்டரீதியான தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட மதகுரு அடையாள அட்டை, 2020 பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ☐ தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தும் கடிதம்' மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட தற்காலிக அடையாள அட்டை என்பன இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போது வாககளிப்பதற்காக வாக்காளர்களினால் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக சமர்ப்பிப்பதற்குச் சந்தரப்பம் வழங்கப்பட்டிருந்தது.

## 11. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக போட்டியிட்ட தரப்பினர்களுக்கு இலவச அஞ்சல் வசதிகளை வழங்குதல்.

1981 இன் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 125 ( 1 ) ஆம் பிரிவின் பிரகாரம் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் மேற்படி பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அவர்களால் தயாரிக்கப்பட்ட அஞ்சல் செய்தியொன்று வீதம் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு கட்டணமின்றி அஞ்சலில் அனுப்பி வைப்பதற்குத் தேவையான வசதிகள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் அஞ்சல் மாஅதிபர் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டது.

இந்தச் செய்தியை கையளிக்க வேண்டிய அஞ்சல் அலுவலகம், அந்தந்த தேர்தல் மாவட்டத்திற்கு ஏற்ப தெரிவுசெய்து, அதற்கமைய குறித்த செய்திகளை கையளிக்க வேண்டிய காலமும் அஞ்சல் மாஅதிபர் அவர்களால் மேற்படி தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

## 12. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக போட்டியிட்ட தரப்பினர்களுக்கு வானலைக் கால (ஒளிபரப்பு நேர) வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

அதேபோன்று 1981 இன் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 126 (1) ஆம் பிரிவின் கீழ், இந்தப் பாராளுமன்றத் தேர்தல் போட்டியிடுவதற்கு முன்வந்த 40 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் 313 சுயேச்சைக் குழுக்களுக்கும், தமது அரசியல் கொள்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு இலங்கை வானொலி மற்றும் இலங்கை தொலைக்காட்சி மூலம் இலவசமாக வானலைக் காலத்தை (ஒளிபரப்பு வசதிகளை) வழங்குவதற்கு அவகாசம் செய்துகொடுக்கப்பட்டது. இந்த ஒரு ஒளிபரப்பு சந்தர்ப்பத்திற்கான ஆகக் கூடிய காலம் 15 நிமிடங்களாகக் காணப்பட்டதோடு போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை 02 தொடக்கம் 14 வரை மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 132 விட அதிகரிக்கின்ற போது 60 நிமிடங்களும் 14 இற்கும் அதிகமான எண்ணிக்கைக்கு போட்டியிடுகின்ற போது மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 132 விட அதிகரிக்கின்ற போது உயர்ந்தளவு 90 நிமிடங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது.

அதற்கமைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் சிங்கள சுதேச சேவையில் 28 அரசியல் கட்சிகளுக்காக 15 நிமிடங்கள் வீதம் 124 நிகழ்ச்சித்திட்டங்களும் , 201 சுயேச்சைக் குழுக்களுக்காக 15 நிமிடங்கள் வீதம் 402 நிகழ்ச்சித்திட்டங்களும் தமிழ் சுதேச சேவையில் 12 அரசியல் கட்சிகளுக்காக 15 நிமிடங்கள் வீதம் 40 நிகழ்ச்சித்திட்டங்களும் 112 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 15 நிமிடங்கள் வீதம் 224 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்துவதற்கான சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் போட்டியிடுகின்ற கட்சிகள்,சுயேச்சைக் குழுக்களுக்காக 15 நிமிடங்கள் வீதம் 285 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

வேட்பாளர்களுக்காக வழங்கப்பட்ட இந்த வானலைக் கால (ஒளிபரப்பு) வசதிகளின் கீழ் உரையாற்றும் போது அதற்காக ஒழுக்க நெறிக்கோவையொன்று அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் ஆணைக்குழுவினால் உரிய நிறுவனங்களுக்கும் மற்றும் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த ஒழுக்க நெறிக் கோவையில் எந்தவொரு கட்சிக்கு/ குழுவுக்கு வேறு கட்சியொன்று அல்லது குழுவொன்று சார்பாக உரையாற்றுதல், கட்சிகள்/ குழுக்களின் கொள்கைகளுக்குரிய விடயங்கள் தவிர்ந்த ஆத்திர மூட்டும்,வெறுப்பூட்டும்,வெறுக்கத்தக்க பேச்சுக்கள் அல்லது ஒரு தரப்பினருக்கு பாதிப்பான விதத்தில் உரைகளை நிகழ்த்துதல் கூடாது என்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டது.

## 13. தேர்தலின் போது அரச ஆதனங்களை போட்டியிடுகின்ற தரப்பினர்கள் ஊக்குவிப்புக்காகப் பயன்படுத்திக்கொள்வதைத் தவிர்த்தல் மற்றும் தேர்தல்கள் பிணக்கு முகாமைத்துவம்.

அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய, அரச ஆதனங்களை தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்/ வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்கு காரணமான விதத்தில் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி யாப்புத் திருத்தத்திற்க அமைவாக அனைத்துத் தேர்தல்களிலும் மேற்கொள்ளப்பட்டவாறு, அரச சொத்துக்களின் முறையற்ற பாவனையைத் தடுப்பதற்காக 2178/29 ஆம் இலக்க 2020.06.06 ஆம் திகதிய திகதிய அரச வர்த்தமானி மூலம் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது. அதற்கமைய தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்குச் உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனங்களைக் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் வித்ததில் அல்லது சுதந்திரமானதும் மற்றும் நீதியானதமான தேர்தல் ஒன்றை நடாத்துகின்ற பணிகளுக்கு இடையூறானவாறு பயன்படுத்துவதைத் தடுப்பது அரச ஆதனங்களின் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ள அனைவரதும் பொறுப்பொன்றாகும்.

இதற்கு மேலதிகமாக, உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களை அரசியல் பிரச்சார கூட்டங்களுக்குச் சென்று வருவதற்காகப் பயன்படுத்தல், உள்ளூராட்சி நிறுவனங்களிற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள், பொருட்களாதியவற்றை மற்றும் பணியாட்குழுவினர்களை கட்சிகள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்காக சுவரொட்டிகள் கொண்டு செல்லல் (போக்குவரத்து), கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக பயன்படுத்தல் தடையாகுமென வலியுறுத்தி மற்றும் அரசியல் கட்சிகள்/ வேட்பாளர் கூட்டங்கள், பிரச்சார சுவரொட்டிகள், பாதயாத்திரைகள், துண்டுப்பிரசுரங்களைப் பகிரந்தளித்தல் போன்றவற்றிற்குரிய தேர்தல் சட்டங்களை மீறுவதிலிருந்து தவிர்ந்திருப்பதன் தேவைப்பாட்டை வலியுறுத்தி ஊடக அறிவித்தல் இலக்கம் 41 வெளியிடப்பட்டதோடு, தேர்தல் சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

இந்தத் தேர்தலின் போது அது தொடர்பாகக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக தேசிய மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் முறைப்பாட்டு முகாமைத்துவ அலகுகள்(பிரிவுகள்) தாபிக்கப்பட்டன. மேற்படி அலகுகளில் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ள சிவில் அலுவலர்களை முன்கூட்டியே இனங்கண்டு அவர்களுக்காக விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் 25 மாவட்டங்களும் உள்ளடக்கும் வகையில் வலய மட்டத்தில் நடாத்தப்பட்டன. அவ்வாறு இந்த ஒவ்வொரு முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கும் நிரந்தர பொலிஸ் அலுவலர்கள்

குழுக்களை இணைப்புச் செய்வதற்கு பொலிஸ் மாஅதிபர் அவரிகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொலிஸ் அதிகாரிகள் உட்பட மாவட்டத்தின் சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள், சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர்களுக்காகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. தேர்தல் முறைப்பாட்டு விசாரணை பிரிவுகளுக்கு தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், வட்ஸ்அப் என்பன மூலம் தேர்தல் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கக் கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டிருந்ததோடு, அது தொடர்பாக பொது மக்களை அறிவூட்டவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தச் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல் தேர்தல் பிணக்கு முகாமைத்துப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது (தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவுகளின் முறைப்பாடுகள் அவற்றை விசாரித்தல் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான தகவல்கள் அடங்கிய கட்டுரையொன்று இந்தச் செய்திச் சஞ்சிகையில் பிரிதோர் இடத்தில் பிரசுரிக்கப்படுவதால் மேலதிகத் தகவல்களை அந்த ஆக்கத்தை வாசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை தயவன்புடன் கவனத்தில் கொள்ளவும்.)

## 14. பாதுகாப்பு ஏற்பாடுகள்

பாராளுமன்றத் தேர்தலில் போது பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்தல் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் தலைமையிலான தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேட்ட பொலிஸ் அலுவலர்களுடன் பல கலந்துரையாடல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டது. இந்த கலந்துரையாடல்களின் போது எட்டப்பட்ட இனக்கப்பாடுகளுக்க ஏற்ப தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர் மாவட்டங்களின் சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடி, தேர்தலை நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. தேர்தலுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் ஆரம்பம் தொடக்கம் தேர்தல் முடிவுறுத்தப்படும் வரையான காலப்பகுதியினுள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலர்கங்களின் பாதுகாப்பு தொடர்பாக பொலிஸ் அலுவலர்கள் கடமையில் அமர்த்தப்பட்டனர். இந்த பாதுகாப்பு வேலைத்திட்டம் மற்றும் அதற்குரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் அடங்கிய கைநூலொன்று பொலிஸ் திணைக்களத்தினால் அனைத்து மட்டங்களின் பொலிஸ் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு நிலையப் பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அலுவலர்களை ஈடுபடுத்தப்பட்டிருந்ததோடு, அந்த நிலையங்களுக்கு வாக்குச்சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களாதியவை கொண்டு செல்லும் போதும், வாக்கெடுப்பின் பின்னர் வாக்குப் பெட்டிகள் மற்றும் உரிய பொருட்களை மீள தெரிவத்தாட்சி அலுவலர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப வாக்கெண்ணல் நிலையங்களுக்க ஒப்படைக்க எடுத்துவரும் போதும், விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. தேர்தல் தினத்தின் போது தேர்தல் பணிகள் மற்றும் அதற்கு முந்திய தினம் வாக்கெடுப்பு நிலையங்களில் இருந்த வாக்கெடுப்பு நிலையப் பணியாட்குழுவினருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் தொடர்ச்சியான நடமாடும் பொலிஸ் பிரிவொன்று ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல் ஆணையாளர்களால் வாககெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு பொருட்கள் விநியோகித்தல், வாக்கெடுப்பு தின அலுவல்களின் பின்னர் வாக்குப் பெட்டி உள்ளிட்ட பொருட்களை மீண்டும் கையேற்றல், வாக்கெண்ணல் மற்றும முடிவுகள் தயாரிக்கப்படும் இடங்களில் பாதுகாப்புக்காக, மாவட்ட சிரேட்ட பொலிஸ் அலுவலர்களுடன் தேவையான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வாக்கெண்ணல் பணிகளை வாக்கெடுப்பு தினத்திற்கு அடுத்த தினம் மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் வாக்கெண்ணல் மண்டபங்கள் அமையப் பெற்றுள்ள வளவுகளுக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

## 15. ஊடக வழிகாட்டுநெறிகள்

தேர்தல் ஒன்றை நடாத்தும் சந்தர்ப்பத்தில் பொது மக்களுக்கு இது தொடர்பான பெரும்பாலான தகவல்களை வழங்குவதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமது வெற்றியின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாகப் பொதுமக்களை அறிவுறுத்துதல் ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான தகவல்கள் போன்றே கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார நடவடிக்கைகளை சமநிலையிலும்/ நடுநிலையானதாகவும் அறிக்கையிடல் ஊடகங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுவதோடு அவ்வாறின்றி பக்கச்சார்பாகச் செயற்படுதல் மற்றய தரப்பினருக்குச் செய்கின்ற பாரியதோர் அநீதியாகும். அரச ஊடகங்கள் போன்றே தனியார் ஊடகங்களும் தேர்தலோடு தொடர்புடைய செய்திகளை அறிக்கையிடுகின்ற போது நடுநிலையாகச் செயற்படுதல் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல் செயற்பாடொன்றிட்கு கட்டாயமென்பதோடு இந்த நிலைமைகளையும் கவனத்திற் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(5) (அ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களையும் அழைத்து கலந்துரையாடி அவர்களின் இணக்கப்பாட்டுடனும் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடனும் ஊடக வழிகாட்டு நெறிகள் தயாரிக்கப்பட்டு 2165/71 ஆம் இலக்க 2020 மார்ச் மாதம் 06 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர் அடிக்கடி ஏற்பட்ட சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்கும் நோக்கில் குறித்த வர்த்தமானிப் பத்திரத்தில் சிற்சில திருத்தங்களை உள்டங்கி மீண்டும் 2178/24 ஆம் இலக்க 2020.06.03 ஆம் திகதி கொண்டதாகவும் மற்றும் 2184/51 ஆம் இலக்க 2020.07.17 ஆம் திகதி கொண்டதாகவும் திருத்தம் செய்யப்பட்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்பட்டது..

## 16. தேர்தல் கடமைகளுக்காக அலுவலர்களை ஈடுபடுத்தல் மற்றும் வாகனங்கள்

இந்தத் தேர்தலை வெற்றிகரமான விதத்தில் முகாமைத்துவம் செய்வதற்காக அரச அலுவலர்கள், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவுகளின் அலுவலர்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வளங்கள், வாகனங்கள் என்பன ஈடுபடுத்தப்பட்டன. வாக்குச் சீட்டு விநியோகம் மற்றும் கையேற்றல், வாக்களிப்பு நிலையம், வாக்கெண்ணல், முடிவுகளை அட்டவணைப்படுத்தல், ஒருங்கிணைப்பு பணியாட்குழுவினர், குழுக் கடமைகள், அமய போன்ற அரச சிரேட்ட அலுவலர்கள் தொடக்கம் கனிட்டநிலை ஊழியர் மட்டம் வரையான பல்வேறு குழுக்களின் உதவி பெற்றுக் கொளாப்பட்டது. இந்தத் தேர்தலுக்காக அரச ஊழியர்கள் மற்றும் அமய ஊழியர்கள் சுமார் 263,500 பேர் வரையில் ஈடுபடுத்துவதற்கு நேரிட்டது. இந்த அலுவலர்களைத் தெரிவு செய்வதற்காக உரிய அலுவலர் கணக்கெடுப்பு நடவடிக்கைகள், பயிற்சியளித்தல் மற்றும் இணைப்புச் செய்தல் கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை போக்குவரத்துச் (எடுத்துச செல்லுதல்) செய்தல், வலய மேற்பார்வை மற்றும் பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் சுமார் 5700 வரையில் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள், தனியார் பஸ் வண்டிகள் மற்றும் வாடகை வாகனங்களும் மற்றும் படகுகள், இலங்கை வான் படையினரின் விமானங்களும் வாக்குப் பெட்டிகளை போக்குவரத்துச் செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டன.

## 17. தேர்தல் நிதி முகாமைத்துவம்.

ஒவ்வொரு தேர்தலின் ஆரம்பத்திலும் அதற்கான மொத்தச் செலவுகள் தொடர்பான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படும். இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அதிகரித்தமை காரணமாக தேர்தல் ஆணைக்குழு வசமுள்ள சிறிய அளவுடைய மரப்பலகை வாக்குப் பெட்டிகள் 569 உம், கடந்த சனாதிபதித் தேர்தலின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவுகளைக் கொண்ட 12,551 காட்போட் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. கொவிட் 19 தொற்றுநோய்க் கட்டுப்பாட்டுக்காக சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்ற வேண்டியேற்பட்டமை காரணமாக அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்காகவும் விசேட கார்போட் வாக்களிப்புச் சிற்றறைகள், கைகளைச் சுத்தம் செய்வதற்கான தொற்றுநீக்கித் திரவங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கும் நேரிட்டது. அரசியல் கட்சிகள்/ குழுக்களின் கொள்கைப் பிரகடனத்தை இலவச அஞ்சலில் அனுப்பிவைத்தல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், வீட்டுத் அறிவித்தல்கள் மற்றும் நியமனக் கடிதங்கள் என்பனவற்றைப் விநியோகிப்பதற்காக முதன்மைச் சேவை முகப்படையாளத்தின் கீழ் (லேபள்) அஞ்சல் திணைக்களத்தினால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. வாக்குச்சீட்டுக்கள் உள்ளிட்ட நியதிச்சட்ட எழுத்தாவணங்கள் பெரும்பாலானவை அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் அச்சிட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக கட்டாயமாகத் தேவைப்பட்ட நியதிச்சட்டமல்லாத அட்டவனைகள் தனியார் நிறுவனங்களில் அச்சிட்டுக்கொள்ளப்பட்டது. வாக்களிக்கும் போது வாக்காளர்களால் தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயத் தேவைப்பாடொன்றாகும். தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்து ஆனால் 2020.07.08 திகதி வரையும் அவை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகளுக்காக தேசிய அடையாள அட்டையின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விசேட கடதாசியொன்றில் அச்சிடப்பட்ட பத்திரமொன்று ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விரைவாக அச்சிட்டுக்கொள்ள வேண்டியேற்பட்டது. தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வேட்பாளர்களுக்கு பிரச்சார நடவடிக்கைகளுக்காக இலவசமாக வானலைக் காலத்தைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவுகளை மீளளிப்புச் செய்யுமாறு அந்த நிறுவனங்களிலிருந்து கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன். அவ்வாறே அரசாங்க தகவல் திணைக்களமும் இந்த தேர்தலில் ஊடகக் கலந்துரையாடல்களை நடாத்தல் மற்றும் முடிவுகள் வெளியிடலுக்குரிய நடவடிக்கைகளுக்காக உதவி வழங்கியது. மேற்படி நிறுவனங்களிடமிருந்த பெற்றுக் கொண்ட சேவைகள்/ பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு மேலதிகமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்ட அனைத்துச் செலவுகளும் உள்ளடங்கலாக இந்த தேர்தலில் பணிகளுக்காக சுமார் 6,500 மில்லியன் ரூபா வரை செலவு ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 18. தேர்தலை நடாத்துதல்

2020.08.05 ஆம் திகதி மு.ப.7. 00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரையான காலப்பகுதியினுள் நாட்டிலுள்ள 22 தேர்தல்கள் மாவட்டங்களில், 12,985 வாக்களிப்பு நிலையங்களிலும் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக தாபிக்கப்பட்ட 12 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பு அலுவல்களை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாட்டுப் பணிகளும் அதற்கு முன்னைய தினம் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நிறைவுசெய்யப்பட்டன. வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய பணியாட்குழுவினர்களும் வாக்களிப்பு நிலையங்களுக்குத் தேவையான பொருட்களாதியவைகளும் வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம், வாக்களிப்பு நிலையங்களுக்கு போக்குவரத்துச் செய்யப்பட்டன. விநியோகித்தல், கையேற்றல், வாக்கெண்ணல் மண்டபங்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களுக்காக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள், பாடசாலைகள் மற்றும் மதத்தலங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக சந்தர்ப்பத்திற்கேற்ப வாக்களிப்பு நிலையங்களாகத் தற்காலிக கொட்டில்களும் அமைக்கப்பட்டன. இத் தேர்தலின் போது தேர்தல் கண்காணிப்புக்காக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மாத்திரம் தொடர்புட்டதோடு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளவில்லை. பெபரல் மற்றும் தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (ஊஆநுஏ) என்பன வாக்களிப்பு நிலையத்தினுள்லிருந்து கண்காணிப்பில் ஈடபட்டதோடு ஏனைய காண்காணிப்பு அமைப்புக்கள் வெளிக்கண்காணிப்பு அலுவல்களில் மாத்திரம் ஈடுபட்டன. விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் வாக்கெடுப்பு தினத்தன்றே வாக்கொண்ணல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இம்முறை முதல் தடவையாக வாக்கெடுப்புக்கு அடுத்த தினம் அதாவது 2020.08.06 ஆம் திகதி மு.ப 8.00 மணி தொடக்கம் 22 தேர்தல்கள் மாவட்டங்களினுள் தாபிக்கப்பட்ட 71 வாக்கெண்ணல் வளவுகளினுள் 2306 சாதாரண வாக்கெண்ணல் மண்டபங்கள் மற்றும் 453 அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களில் தேர்தலில் போட்டியிட்ட தரப்பினர்களின் முகவர்களின் முன்னிலையில் வாக்கெண்ணல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்டிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 16,263,885 ஆகக் காணப்பட்டதோட அதில் 12,343,302 அதாவது 75.89ம வாக்குகள் அளிக்கப்பட்டன.

**உசாத்துணை ஆவணங்கள**


1. அரசியல் யாப்பு
2. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்.
3. தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல்கள் (1947 தொடக்கம் 2015 வரையான ) நூல்.
4. 2020 பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவினால் பேணிவரப்பட்ட கோப்புக்கள்.


## தேருநர் இடாப்பு மீளாய்வு 2020

வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங்கள் (டீஊ படிவங்கள்)
அனைத்துக் கிராம அலுவலர்கள் மற்றும் விசேட கணக்கெடுப்பு அலுவலர்கள்
ஆகியோரினால் வீட்டுத் தலைவர்களுக்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><td colspan="2">BC படிவங்களை வீட்டுத் தலைவர்களிடமிருந்து மீளக் கையளித்தல்</td><td>2020.11.16 வரை</td></tr>
<tr><td colspan="2">பதிவு செய்யப்படாதவர்களின் முறைப்பாடுகள் ருடு படிவங்களை நு-ஆயடை ஊடாகக் கையேற்றல்</td><td>2020.10.12 தொடக்கம்<br>2020.11.23</td></tr>
<tr><td rowspan="2">'அ' மற்றும் 'ஆ' பட்டியல்</td><td>தயாரித்தல் மற்றும் பரீட்சித்தல்</td><td>2020.11.27 வரை</td></tr>
<tr><td>காட்சிப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல்</td><td>2020.11.30</td></tr>
<tr><td colspan="2">தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படுகின்ற மற்றும் உட்சேர்க்கப்படுகின்ற பெயர்கள் 'அ' மற்றும் 'ஆ' பட்டியல் காட்சிப்படுத்தல்</td><td>2020.12.03 தொடக்கம் 2020.12.30</td></tr>
<tr><td colspan="2">உரிமைக் கோரிக்கை சமர்ப்பித்தல்<br>14டு6சு ஆம் பிரிவுக்கமைய ஆட்சேகனை சமர்ப்பித்தல்<br><br>14டு3சு பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கை உரிமைக் கோரிக்கை பட்டியலைக் காட்சிப்படுத்தல்<br>I. ஆம் உரிமைக் கோரிக்கைப் பட்டியல்<br>II. ஆம் உரிமைக் கோரிக்கைப் பட்டியல<br><br>14டு7சு ஆம் பிரிவுக்கமைய உரிமைக் கோரிக்கைகளுக்காக ஆட்சேபனை முன்வைத்தல்<br>I. ஆம் உரிமைக் கோரிக்கைப் பட்டியலுக்காக<br>II. ஆம் உரிமைக் கோரிக்கைப் பட்டியலுக்காக</td><td>2020.11.19 தொடக்கம் 2020.12.16<br>2020.11.19 தொடக்கம் 2020.12.16<br><br><br><br>2020.12.03<br>2020.12.17<br><br><br>2020.12.03 தொடக்கம் 2020.12.16<br>2020.12.17 தொடக்கம் 2020.12.30</td></tr>
<tr><td colspan="2">உரிமைக் கோரிக்கை ஆட்சேபனை பரீட்சித்தல்</td><td>2020.12.03 தொடக்கம் 2021.02.15</td></tr>
<tr><td colspan="2">வரைவு தேருநர் இடாப்பை கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் தேர்தல்கள் அலுவலகங்களில் காட்சிப்படுத்தல்</td><td>2021.03.04 தொடக்கம் 2021.03.10</td></tr>
<tr><td colspan="2">தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல்</td><td>2021.03.15</td></tr>
</table>

# பாராளுமன்றத் தேர்தல்கள் 2020

**அரசியல் கட்சிகள், சுயேச்சை வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை**

| கட்சி: சுயேச்சைக் குழு | பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் சதவீதம் | | தேர்தல்கள் மாவட்டங்களின் கீழ் பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை | அரசியலமைப்பின் 99 அ உறுப்புரையின் கீழ் உரித்தாகும் ஆசனங்களின் எண்ணிக்கை | ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 6,853,690 | 59.09% | 128 | 17 | 145 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,771,980 | 23.90% | 47 | 7 | 54 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 327,168 | 2.82% | 9 | 1 | 10 |
| தேசிய மக்கள் சக்தி | 445,958 | 3.84% | 2 | 1 | 3 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 67,766 | 0.58% | 1 | 1 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 61,464 | 0.53% | 2 | – | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 249,435 | 2.15% | 0 | 1 | 1 |
| எங்கள் மக்கள் சக்தி கட்சி | 67,758 | 0.58% | 0 | 1 | 1 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 67,692 | 0.58% | 1 | 0 | 1 |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி | 66,579 | 0.57% | 1 | 0 | 1 |
| முஸ்லிம் தேசிய முன்னணி | 55, 981 | 0.48% | 1 | 0 | 1 |
| தமிழ் மக்கள் தேசிய கூட்டணி | 51,301 | 0.44% | 1 | 0 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 43,319 | 0.37% | 1 | 0 | 1 |
| தேசிய காங்கிரஸ் | 39,272 | 0.34% | 1 | 0 | 1 |
| ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 34,428 | 0.30% | 1 | 0 | 1 |
| **வட்ஸ்ரீத** | **11,598,929** | **71,32%** | **196** | **29** | **225** |

| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 16,263,885 | 11,598,929 (71.32%) | 744,373 (4.58%) | 12,343,302 (75.89%) |

# பாராளுமன்றத் தேர்தல்கள் 2020

**ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டம் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை**

## 01 கொழும்பு

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| சரத் வீரசேக்கர | 3,28,092 |
| விமல் வீரவங்ஸ | 2,67,084 |
| உதய பிரபாத் கம்மன்பில | 1,36,331 |
| விஜயதாச ராஜபக்ஷ | 1,20,626 |
| பந்துல குணவர்தன | 1,01,644 |
| பிரதீப் சமன் குமார உந்துகொட ரூபசிங்ஹகே | 91,958 |
| தினேஷ் சந்திர ரூபசிங்ஹ குணவர்தன | 85,287 |
| மதுர விதானகே | 70,205 |
| பிரேம்நாத் சி. தொலவத்த | 69,055 |
| காமினி குலவங்ஸ லொக்குகே | 62,543 |
| அச்சிகே தொன் சுசில் பிரேமஜயந்த் | 50,322 |
| ஜகத் குமார | 47,693 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | 3,05,744 |
| எஸ்.எம்.மரிக்கார் | 96,916 |
| மொஹொமட் முஜிபர் ரஹுமான் | 87,589 |
| கினிகே மஹேந்திர ஹர்ஷ த சில்வா | 82,845 |
| அச்சிகே பாட்டலி சம்பிக ரணவக்க | 65,574 |
| எம். கணேஷன் | 62,091 |

**தேசிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அநுர குமார திசாநாயக்க | 49,814 |

## 02 கம்பஹா

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| நாலக்க கொடஹேவா | 3,25,479 |
| பிரஸன்ன ரணதுங்க | 3,16,544 |
| ஹேரத் ஹிடிஹாமி அப்புஹாமிலாகே தொன் இந்திக அனுருத்த | 1,36,297 |
| ஆரச்சிலாகே சிசிர ஜயகொடி | 1,13,130 |
| எண்டனி நிமல் லான்ஸா | 1,08,945 |
| எம். டப்ளிவ்.டீ. சஹன் பிரதீப் விதான | 97,494 |
| பர்பசுவா சுதர்ஸனீ பர்னாந்துபுள்ளே | 89,329 |
| பிரஸன்ன ரணவீர புலத்வெலகே | 83,203 |
| கோகிலா ஹர்ஷணி குணவர்தன | 77,922 |
| அலகியவன்ன லஸந்த | 73,061 |
| கச்சகடுகே நலின் ருவன்ஜீவ பிரனாந்து | 69,800 |
| விதான பதிரணகே மிலான் சஜித் ஜயதிலக்க | 68,449 |
| ராஜபக்ஷ பத்திரன்நெஹெலாகே உபுல் மஹேன்திர ராஜபக்ஷ | 67,756 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| சரத் பொன்சேகா | 1,10,535 |
| அ.அ.ரஞ்ஜன் லியோ சில்வெஸ்டர் ராமநாயக்க | 1,03,992 |
| ஹர்ஷண சுபுன் ராஜகருணா | 73,612 |
| சேனாதீரகே தொன் கவிந்த ஹேஷான் ஜயவர்தன | 52,026 |

**தேசிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| ஹேரத் முதியன்சேலாகே விஜித ஹேரத் | 37,008 |

## 03 களுத்துறை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| விதுர விக்ரமநாயக | 1,47,958 |
| அபேகுணவர்தன ரோஹித பியதிஸ்ஸ பஹலகே | 1,47,472 |
| ஆரச்சிகே சஞ்ஜீவ எதிரிமான்ன | 1,05,973 |
| எச்.எம். பியல் நிஷாந்த த சில்வா | 1,03,904 |
| எஸ்.ஏ. ஜயந்த | 1,00,386 |
| அனுப பியும் பஸ்குவல் | 97,777 |
| லலித் எல்லாவல | 76,705 |
| மஹிந்த புத்ததாஸ சமரசிங்ஹ | 58,514 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| ராஜித சேனாரத்தன | 77,476 |
| குமார வெல்கம | 77,083 |

## 04 மஹநுவர

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| அமுனுகம திலும் சுராஜ் பண்டார | 1,71,758 |
| அலுத்கமகே மஹிந்தானந்த | 1,61,471 |
| லொகான் ரத்வத்தே | 1,40,917 |
| அனுராத ஜயரத்ன | 1,40,798 |
| கெஹெலிய ரம்புக்வெல்ல | 1,10,832 |
| வசந்த யாப்பா பண்டார | 1,08,940 |
| குணதிலக ராஜபக்ஷ | 49,317 |
| உதயன சாமிந்த கிரிந்திகொட | 39,904 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அப்துல் ரஹுப் ஹிபதுல் ஹகீம் | 83,398 |
| அப்துல் ஹலீம் மொகமட் ஹாசீம் | 71,063 |
| வேலு குமார் | 57,445 |
| லக்ஷ்மன் பண்டார கிரிஎல்ல | 52,311 |

## 05 மாத்தளை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| தென்னக்கோன் ஜனக பண்டார | 73,296 |
| என். நாலக்க பண்டார கோட்டேகொட | 71,404 |
| தென்னக்கோன் பிரமித்த பண்டார | 67,776 |
| ரோஹண திஸாநாயக்க | 50,368 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| ஜம்புகஹ பிட்டியேகெதர ரோஹினீ குமாரி விஜேரத்ன கவிரத்ன | 27,587 |

## 06 நுவரெலியா

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| ஜீவன் தொண்டமான் | 1,09,155 |
| ஆர்.எம்.சீ.பி. ரத்நாயக்க | 70,871 |
| எஸ்.பி.திசாநாயக்க | 66,045 |
| மருதபாண்டி ராமேஷ்வரன் | 57,902 |
| நிமல் பியதிஸ்ஸ | 51,225 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| டி. பழனி | 83,392 |
| வேலுசாமி ராதாகிருஷ்ணன் | 72,167 |
| மயில்வாகனம் உதயகுமார் | 68,119 |

## 07 காலி

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| ரமேஷ் பத்திரண | 2,05,814 |
| அதுகோரலகே காரியவசம் சமிந்த சம்பத் | 1,28,331 |
| அகம்பொடி மொஹான் பிரியதர்சன த சில்வா | 1,11,626 |
| சந்திம வீரக்கொடி | 84,984 |
| இசுறு தொடங்கொட | 71,266 |
| சான் விஜயலால் த சில்வா | 67,793 |
| கீதா சமன்மலீ குமாரசிங்ஹ | 63,357 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| கயந்த கருணாதிலக்க | 50,097 |
| மலிகஸ்பே கோரலகே நலின் மனுஷ நாணாயக்கார | 47,399 |

## 08 மாத்தறை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| நிபுண ரணவக | 1,31,010 |
| கருணாதாஸ கொடிதுவக்கு | 1,14,319 |
| அழகப்பெரும டலஸ் | 1,03,534 |
| காஞ்சன விஜேசேகர | 96,033 |
| அபேவர்தன யாப்பா மஹிந்த | 80,595 |
| கமகே ஹத்தொடுவ வீரசுமன வீரசிங்ஹ | 77,967 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அகலங்க புத்திக உதித தெத்துவ பத்திரண | 44,839 |

## 09 அம்பாந்தோட்டை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| நாமல் ராஜபக்ஷ | 1,66,660 |
| தெனகம விதாரகே சானக தினுஷான் | 1,28,805 |
| அமரவீர மஹிந்த | 1,23,730 |
| சமல் ராஜபக்ஷ | 85,330 |
| உபுல் சஞ்ஜீவ கலப்பத்தி | 63,369 |
| அஜித் ராஜபக்ஷ | 47,375 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| திலிப் வெதஆரச்சி | 25,376 |

## 10 யாழ்ப்பாணம்

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

| | |
|---|---|
| சிவஞானம் சிறீதரன் | 35,884 |
| ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணன் | 27,834 |
| தருமலிங்கம் சித்தார்த்தன் | 23,840 |

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி**

| | |
|---|---|
| அங்கஜன் இராமநாதன் | 36,365 |

**ஈழ மக்கள் ஜனநாயக கட்சி**

| | |
|---|---|
| டக்ளஸ் தேவானந்தா | 32,146 |

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்**

| | |
|---|---|
| கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் | 31,658 |

**தமிழ் மக்கள் தேசிய கூட்டணி**

| | |
|---|---|
| கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஷ்வரன் | 21,554 |

## 11 வன்னி

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

| | |
|---|---|
| இருதயநாதன் சாள்ஸ் நிர்மலநாதன் | 25,668 |
| அ.அடைக்கலநாதன் | 18,563 |
| சு.நோகராதலிங்கம் | 15,190 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அப்துல் றிஷாட் பதியுதீன் | 28,203 |

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| காதர் காதர் மஸ்தான் | 13,454 |

**ஈழ மக்கள் ஜனநாயக கட்சி**

| | |
|---|---|
| குலசிங்கம் திலீபன் | 3,203 |

## 12 மட்டக்களப்பு

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

| | |
|---|---|
| இராசமாணிக்கம் சாணக்கியா ராகுல் ராஜபுத்திரன் | 33,332 |
| கோவிந்தன் கருணாகரம் | 26,382 |

**தமிழ் மக்கள் விடுதலை புலிகள்**

| | |
|---|---|
| சிவநேசதுரை சந்திரகாந்தன் | 54,198 |

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

| | |
|---|---|
| அஹமட் செய்னுலாப்தீன் நஸீர் | 17,599 |

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| சதாசிவம் வியாழேந்திரன் | 22,218 |

## 13 திகாமடுல்லை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| திசாநாயக்க விமலவீர | 63,594 |
| டீ.வீரசிங்க | 56,006 |
| ராஜ மந்திரிலாகே திலக் ராஜபக்ஷ | 54,203 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| ஹபீப் மொஹமட் மொஹமட் ஹரீஸ் | 36,850 |
| மொஹமட் காசீம் மொஹமட் பைசால் | 29,423 |

**தேசிய காங்கிரஸ்**

| | |
|---|---|
| அதாஉல்லா அஹமட் லெப்பை மரிக்கார் | 35,697 |

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்**

| | |
|---|---|
| சபியூல் முதுனாபீன் மொஹமட் முஸ்ஸாரப் | 18,389 |

## 14 திருகோணமலை

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| முகமெது ஷரீப் தௌபீக் | 43,759 |
| இம்ரான் மஹரூப் | 39,029 |

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| அதுகோரலலாகே பெலவத்தே கபில நுவன் அதுகோரல | 30,056 |

**இலங்கை தமிழ் அரசு கட்சி**

| | |
|---|---|
| இராஜவரோதயம் சம்பந்தன் | 21,422 |

## 15 குருணாகல்

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 5,27,364 |
| ஜொன்ஸ்டன் பிரனாந்து | 1,99,203 |
| பஸ்நாயக்க யசரத்னலாகே குணபால ரத்னசேக்கர | 1,41,991 |
| தயாசிறி ஜயசேக்கர | 1,12,452 |
| அசங்க சமிதஜீவ நவரத்ன | 82,779 |
| எச். எம். சமன்பிரிய ஹேரத் | 66,814 |
| டீ.பி.ஹேரத் | 61,954 |
| அனுர பிரியதர்ஷன யாப்பா | 59,696 |
| ஜயரத்ன ஹேரத் | 54,351 |
| சாந்த பண்டார | 52,086 |
| உடுகும்புரகே சுமித் | 51,134 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| நலீன் பண்டார ஜயமஹ | 75,631 |
| அலவதுவல ஜே.சீ. | 65,956 |
| அஸோக அபேசிங்ஹ | 54,512 |
| அமரசேன துஷார இந்துனில் | 49,348 |

## 16 புத்தளம்

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| சனத் நிஷாந்த | 80,082 |
| பியங்கர ஜயரத்ன | 75,425 |
| அருந்திக்க பிரனாந்து | 70,892 |
| சிந்தக அமல் மாயாதுன்ன | 46,058 |
| அஷோக்க பிரியந்த | 41,612 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அப்புஹாமி மாகவிட்ட ஆரச்சிகே தொன் ஹெக்டர் ஹப்ஜினஸ் | 34,127 |
| நாணயக்கார வர்ணகுல பட்டபெந்திகே நிரோஷன் அர்ட்லி பிரியந்த பெரேரா | 31,636 |

**முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு**

| | |
|---|---|
| அப்துல் அலி சப்ரி மொஹொமட் ரஹீம் | 33,509 |

## 17 அநுராதபுரம்

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| எஸ்.எம். சந்திரசேன | 1,39,368 |
| சன்ன சுதத் ஜயசுமன | 1,33,980 |
| உத்திக பிரேமரத்ன | 1,33,550 |
| அசங்க ஷெஹான் சேமசிங்ஹ | 1,19,878 |
| துமிந்த திசாநாயக்க | 75,535 |
| எச்.நந்தசேன | 53,618 |
| கே.பி.எஸ்.குமாரசிறி | 49,030 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அப்துல் ரஹ்மான் இஸ்ஹாக் | 49,298 |
| விஜேசுந்தர முதியன்சேலாகே ரோஹண பண்டார விஜேசுந்தர | 39,520 |

## 18 பொலன்னறுவை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| மைத்திரிபால சிறிசேன | 111,137 |
| அனுருத்த ரணசிங்க ஆரச்சிகே ரொஷான் | 90,615 |
| கம்லத் சிறிபால | 67,917 |
| அமரகீர்த்தி அதுகோரல | 45,939 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| ஹேவா கஜமன் பத்தினிகே கிங்ஸ் குமார் நெல்சன் | 22,392 |

## 19 பதுளை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| நிமல் சிறிபால த சில்வா | 1,41,901 |
| சுதர்ஷன தெனிபிட்டிய | 71,766 |
| அமித் தேனுக விதானகமகே | 68,338 |
| தொன் ஆத்தர் சாமர சம்பத் தசநாயக்க | 66,393 |
| அன்ஸ்லம் பெரேரா பொதியாபதுகே டிலான் பிரியன்ஜன் | 53,081 |
| ஆரச்சிக்கே சமிந்த ஜானக்க திஸகுட்டி | 50,151 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| வடிவேலு சுரேஷ் | 49,762 |
| அ. அரவிந்த் குமார் | 45,497 |
| லொக்குகஸ்தொட்ட விதாரணகே சமிந்த விஜேசிறி | 36,291 |

## 20 மொணராகலை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| சஷீந்திர ராஜபக்ஷ | 1,04,729 |
| குமாரசிறி ரத்நாயக்க | 91,530 |
| விஜித பேருகொட | 68,984 |
| அ.ப. ஜகத் புஷ்பகுமார | 66,176 |
| கயாஷான் நவநந்த | 45,384 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| தர்மசேன விஜேசிங்ஹ ஹேரத் முதியன்சேலாகே | 20,662 |

## 21 இரத்தினபுரி

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| வன்னி ஆரச்சி பவித்திரா தேவி | 2,00,977 |
| ஹல்கந்தலிய லேகம்லாகே பிரேமலால் ஜயசேகர | 1,42'037 |
| ஜானக வக்கும்புர | 1,01,225 |
| காமினி வலேபொட | 85,840 |
| அகில எல்லாவல | 71,179 |
| வாசுதேவ நாணயக்கார | 66,991 |
| முதிதா பிரிஸான்தி | 65,933 |
| ஜோன் செனெவிரத்தன | 61,612 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| அங்கும்புர ஆரச்சிக்கே ஹேஷான் விஜய விதானகே | 60,426 |
| உடகம லியனகே வருண பிரியந்த லியனகே | 47,494 |
| தலதா அத்துகோரல | 45,105 |

## 22 கேகாலை

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன**

| | |
|---|---|
| கனக்க ஹேரத் | 1,28,592 |
| ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய | 1,03,300 |
| தாரக்க பாலசூரிய | 96,763 |
| ராஜிகா விக்கிரமசிங்ஹ | 68,802 |
| எம்.ஆர்.எஸ். துஷ்மந்த | 58,306 |
| உதயகாந்த குணதிலக்க | 46,628 |
| எல்.எச். சுதத் மஞ்சுல | 45,970 |

**ஐக்கிய மக்கள் சக்தி**

| | |
|---|---|
| கபீர் ஹஷீம் | 58,716 |
| கஸதேருகே சுஜித் சன்ஜய பெரேரா | 28,082 |

# ௨௦௨௦ பாராளுமன்றத் தேர்தலின் விசேட நிகழ்வுகள்



தேர்தல் செயற்பாடுகள் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்



பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்கள் சம்பந்தமான அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கும் நிகழ்வு



பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக அறிவுறுத்தும் நிகழ்வு





தேர்தல் காலப் பகுதியில் இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு மற்றும் ஊடக நெறிமுறைகள் சம்பந்தமாக அறிவுறுத்தும் நிகழ்வு



தேர்தல் காலப் பகுதியில் இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு சம்பந்தமாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு



பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக பொலிஸ் திணைக்களத்துடனான விஷேட கலந்துரையாடல்



பாராளுமன்றத் தேர்தல் காலப் பகுதியில் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்காக மத ஸ்தலங்கள் மற்றும் மத குருமார்களின் தலையீடு சம்பந்தமாக தவிசாளர், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட்ட அலுவலர்கள் மல்வத்து, அஸ்கிரிய பீடங்களின் மற்றும் ராமஞ்ஞ நிக்காயவின் தலைமை தேரர்களைச் சந்தித்து உரிய விடயம் தொடர்பாக கலந்துரையாடிய நிகழ்வு



# தேர்தல் பிணக்குத் தீர்த்தலூடாக தேர்தல் சட்டங்களைச் செயல் வலுவாக்கம் செய்வதற்கு வரையறுத்தல் மற்றும் 2020 பாராளுமன்றத் தேர்தலின் தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ அனுபவம்.


சுரங்க ரணசிங்க
உதவித் தேர்தல்கள் ஆணையாளர் - தேர்தல் பிணக்குத் தீர்த்தல்


2020 பாராளுமன்ற தேர்தல் சட்டரீதியான எல்லைகளுக்கு அப்பால் பெரும்பாலான உத்திகளை நடைமுறைரீதியாகப் பயன்படுத்தும் சவாலை சிறப்பாக வெற்றிகொண்ட ஒரு தேர்தலாகும். கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் 158 நாட்கள் முழுவதும் நடைபெற்ற 2020 பாராளுமன்றத் தேர்தல் இதுவரை நடைபெற்ற நீண்ட தேசிய தேர்தல் காலப்பகுதியாக வரலாற்றில் பதிவாகியது. பாராளுமன்றத் தேர்தல் விருப்பு வாக்கிற்காக மேற்கொள்ளப்படுகின்ற தவிர்க்க முடியாத போட்டியின் எதிரே ஏற்படுகின்ற தேர்தல் சட்ட மீறல்களுக்கு மேலதிகமாக கொவிட் – 19 நிலைமையின் கீழ் காணப்பட்ட பிரச்சார வரையறைகளுக்கு மத்தியில் தேர்தல் போட்டிக் களத்தில் நடைமுறை ரீதியாக சமநிலையைப் பேணிச்செல்வதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடுமையான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நேரிட்டது. தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துதல், தேர்தல் காலப்பகுதியினுள் ஊடகங்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லாமை மற்றும் அரச அதிகாரம் கொண்ட மற்றும் அதிகாரமற்ற வேட்பாளர்கள் ( ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களிடையே கூட) காணப்பட்ட அதிகாரம் மற்றும் நிதி நிலைமை தொடர்பாகவுள்ள வேறுபாடுகள் மேற்படி நிலைமையை மிகவும் சிக்கல் மிக்கதாகவும் மற்றும் தீவிரத்தன்மை கொண்டதாகவும் மாற்றியதை அவதானிக்க முடிந்தது.

தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான சம்பிரதாய அவதானிப்புக்களுக்கு அமைய மொத்தத் தேர்தல் செயற்பாடுகளும் சுதந்திரமான மற்றும் அமைதியான சூழலில் நடைபெற்றது. 2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பித்து ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மொத்தம் 13,919 தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் 1,503 விசாரணைகள் தொடர்பாக தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவு மற்றும் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றினால் தலையீடு செய்யப்பட்டன. மேற்படி முறைப்பாடுகளிலிருந்து 8,600 தேர்தல் சட்ட மீறல்கள் எனவும், 83 தேர்தல் வன்முறைச் செயல்கள் எனவும், 5,236 சமூக ஊடகங்கள் ஊடாக இனங்காணப்பட்ட முறைப்பாடுகள் எனவும் வகைமீடு செய்யப்பட்டன.

**மொதத் முறைப்பாடுகள் வகைமீடு**




குறிப்பு I


2019 தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியின் போது முன்னறிவிப்புச் செய்யப்பட்டவாறு பிரச்சாரத்திற்கு உரியதான தேர்தல் சட்ட மீறல்களில் முக்கியமாக எழுகின்ற சில விடயங்களை அடையாளம் காண முடிந்தது. அதாவது கொவிட் – 19 நிலைமையின் கீழ் நடைபெற்ற தேர்தல் பிரச்சார வரையறைகளை மீறுதல் இங்கு கவனத்தில் கொள்ளப்படாமல் விடப்பட்டதோடு நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் மீது மாத்திரம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதாவது மத நிகழ்ச்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்புக்காக ஈடுபடுதல், ஊடகங்களின் நடத்தை தெளிவான விதத்தில் சமமின்மையாகக் காணப்படல் மற்றும் சமூக ஊடகப் பிரச்சாரம் என்பன பிரதான காரணங்களாக தோற்றம் பெறல் மற்றும் அரச ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பான முறைப்பாடுகளின் அதிகரிப்பு என்பனவாகும். இதற்கு மேலதிகமாக கிடைத்த முறைப்பாடுகளில் அதிகமானவை ஒரே கட்சி/ குழுவின் வேட்பாளர்களால் தமது கட்சியின் ஏனைய வேட்பாளர்களுக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளாகும். கிடைக்கப்பெற்ற முறைபாடுகளில் எண்ணிக்கை ரீதியான அதிகரிப்பு தென்படுவதோடு முறைப்பாடுகளின் தரத்தன்மையும் ஒப்பீட்டளவில் உயர் பெறுமதியில் காணப்பட்டது. அதாவது ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியைப் பயன்படுத்திப் பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கு உரிய புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் போன்ற சான்றுகள் மூலம் பெரும்பாலான முறைப்பாடுகளின் தரத்தன்மை மேம்படுத்தப்பட்டிருந்ததோடு, அது ஒவ்வொரு முறைப்பாடுகளும் சிறியதாக இருந்த போதிலும் அவற்றையும் தவறவிடாமல் கவனம் செலுத்துவதற்குத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பொலிஸாருக்கு தூண்டுகின்ற நிலைமையாகக் காணப்பட்டது.

**2020.03.02 திகதி தொடக்கம் 2020.08.07 திகதி வரை தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளின் வகைமீடு**

| முறைப்பாடுகளின் வகைமீடு | சதவீதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| சட்விரோத சுவரொட்டிகள்/ பதாதைகளை/ உருவப் படங்களைக் காட்சிப்படுத்தல்/ துண்டுப்பிரசுரங்கள் பகிர்ந்தளித்தல் | 49% | 4205 |
| பொருட்களைப் பகிர்ந்தளித்தல்/ அன்பளிப்புச் செய்தல்/ காசு பகிர்ந்தளித்தல்/ காணி உறுதி வழங்குதல்/ திறந்து வைப்புக்கள் | 11% | 929 |
| கூட்டங்கள்/ ஊர்வலங்கள் நடாத்துதல்/ சட்விரோத அரசியல் அலுவலகங்களை நடாத்துதல் | 10% | 883 |
| அசையும் மற்றும் அசையாத பொது ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்தல் | 7% | 563 |
| அரச உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்/ ஈடுபடுத்தல் | 6% | 518 |
| • வாக்களிப்புக்கு இடையூறு செய்தல்.<br>• வாக்காளர்களுக்கு உபசாரம் செய்தல்<br>• அரச அலுவலர்கள் நியமனம்/ பதவி உயர்வு/ இடமாற்றம்<br>• வாக்கெடுப்பு நிலையம்/ தேர்தல் பணியாட் குழுவினர்/ தேர்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள்<br>• மதத் தலைவர்கள் ஊடாக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>• பிரச்சார நடவடிக்கைகளுக்காக மதத்தலங்களைப் பயன்படுத்தல்<br>• சட்ட விரோதமான விழாக்களை ஏற்பாடு செய்தல்<br>• பொய்ப் பிரச்சாரம்/ பொய்யான செய்திகளை உருவாக்குதல் ∴ வெறுக்கத்தக்க கருத்துக்கள/ அவமதித்தல்/ இனவாதக் கருத்துக்கள்<br>• இலத்திரனியல் ஊடக துஷ்பிரயோகம்<br>• சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சார நடவடிக்கைகள்<br>• அஞ்சல் வாக்குத் தொடர்பான முறைப்பாடுகள்<br>• தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல்<br>• தேர்தலுக்குப் பின்னரான முறைப்பாடுகள் | 17% | 1502 |
| | மொத்தம் | 8600 |

குறிப்பு II

2020.03.02 ஆம் திகதி தொடக்கம் 2020.08.05 ஆம் திகதி வரை மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கைகளை மாவட்ட அடிப்படையில் வகைப்படுத்தல்





குறிப்பு III

2020.03.02 திகதி தொடக்கம் 2020.08.05 திகதி வரை வன்முறைச் செயல்கள் வகைமீடு

| முறைப்பாடுகளின் வகைமீடு | சதவீதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| தாக்குதல்/ கொலைமுயற்சித் தாக்குதல் மேற்கொள்ளல் | 37% | 31 |
| வாய்மூலம் பயமுறுத்தல் | 29% | 24 |
| சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தல்/ ஆதனங்களை பறித்துக் கொண்டு செல்லல் | 11% | 9 |
| தேர்தல் பிரச்சார அலுவலகங்களுக்கு/ சுவரொட்டிகள்/ பதாதைகள் ஆகியவற்றிற்குச் சேதம் விளைவித்தல் | 10% | 9 |
| ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தல்/ துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கொலை செய்வதற்கு முயற்சி செய்தல் | 5% | 4 |
| தீ வைத்தல் (உயிர் பறிக்கும்) (3), ஆட்கடத்தல் (1), துப்பாக்கிப் பிரயோகம் (1), கலவரம் செய்தல்/ கூட்டங்களை நடாத்த தடைகளை ஏற்படுத்தல் (1)) | 7% | 6 |
| | முழு மொத்தம் | 83 |

குறிப்பு IV

2020.03.02 ஆம் திகதி தொடக்கம் 2020.08.05 ஆம் திகதி வரை முறைப்பாடுகளின் எண்ணிக்கை திகதி அடிப்படையில் மாற்றமடைதல் சதவீதமாக




குறிப்பு V

தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வின் போது முக்கிய காரணமாக அமைவது ஒவ்வொரு முறைப்பாடும் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதாகும். தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவுக்கு அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகளில் 98% வரை சாதாரண அல்லது சிறிய தாக்கங்களை உருவாக்கும் முறைப்பாடுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அதிகமான முறைப்பாடுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பிரிவை அல்லது தேர்தல் ஆணைக்குழு மூலம் வெளியிடப்பட்ட ஒரு ஏற்பாட்டை மீறுவதாகும் ஆயினும் தேர்தலுக்குப் பாரதூரமான விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் சம்பவங்களாக இனங்காணப்பட்ட பெரும்பாலான முறைப்பாடுகள் (வன்முறைச் செயல்கள் தவிர்ந்த) சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளினால் உள்ளடக்கப்படாத செயற்பாடுகளை இனங்காண முடியும். சட்டம் காலத்துக்கு உகந்ததாக இல்லாமை தற்போது நிலவும் சிக்கல்களின் எதிரே மேற்கொள்ளப்படுகின்ற தொழில்நுட்ப ரீதியாக புகுந்து செல்லுதல் இவற்றில் அதிகமாகும். இவ்வாறான சம்பவங்கள் சட்டத்தினால் உள்ளடக்கப்படவில்லை என்று கூறி தவிர்ப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு எவ்விதத்திலும் முடியாதென்பதோடு தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதன் உபாயத்தை மேற்கொள்ளும் பொறுப்பை விட இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாற்று வழிகளை மேற்கொண்டு பார்ப்பது கட்டாயமாகக் காணப்பட்டது.

## ஊடகங்கள்

அரச மற்றும் பெரும்பாலான பிரபல்யமான தனியார் இலத்திரனியல் அலைவரிசைகள் ஒரு தெரிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிக்கோ அல்லது கருத்துக்கோ சார்பாக மாத்திரம் பக்கச்சார்பாக செயற்படுவதாக அதிகமான முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றன. சில முறைப்பாடுகளுக்கமைய அரச , அரச அதிகாரம் அல்லது வேறு விதத்தில் ஊடக கவர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் சில தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு மாத்திரம் அதிகளவு ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு இடமளிப்பதாக முறைப்பாடுகள் காணப்பட்டதோடு அவற்றில் அதிகமானவை ஒரே கட்சியைச் சார்ந்த ஏனைய வேட்பாளர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளாகும். ஊடக வழிகாட்டுநெறிகளை வெளியிடுவதற்கு மேலதிகமாக இனங்காணப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் தலையீடு செய்யப்பட்டதோடு, தொடர்ச்சியாக நடைபெற்ற ஊடகத் தலைவர்களின் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களின் கலந்துரையாடல்களின் போது இயன்றவரை அறிவூட்டல் மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஊடகத்தை நடுநிலைமையாக நடத்திச் செல்லும் முயற்சியில் தேர்தல் ஆணைக்குழு ஈடுபட்டது. மிகவும் வரையறுக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் முன்னே எடுக்கக்கூடிய மாற்று உபாயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தனது கவனத்தை எதிர் காலப்பகுதியில் செலுத்தவில்லையெனில் ஊடகம் என்பது தொடர்ந்தும் தேர்தலில் மக்கள் விருப்பை திசைமுகப்படுத்தலைத் தீர்மானிக்கின்ற பிரதான கருவி என்றபோதிலும் அது எந்தவொருவகையான சட்டரீதியான, ஒழுக்கரீதியான அல்லது சனநாயகக் கோட்பாடுகள் மற்றும் முரண்படும் சமூக வெளியாகக் காணப்படும். எனவே எதிர்வரும் தேர்தல்களின் போது தொடர்ச்சியாக ஊடக வழிகாட்டு நெறிகளை மீறுகின்ற ஊடக நிறுவனங்களுக்கு எதிராக கீழே காட்டப்பட்டுள்ள மாற்று நடவக்கைகளை மேற்கொள்ளல் பற்றி தேர்தல் ஆணைக்குழு கருத்தில் கொள்ள வேண்டுமென்பதுடன் அது எப்போதும் சுதந்திர ஊடகங்கள் தொடர்பில் தகாத செல்வாக்கை ஏற்படுத்தாதென்பதை உறுதிப்படுத்தும் கூட்டுச் செயற்பாடுகளாக நடைபெறல் வேண்டும். மேற்படி பிரேரணைகள் யாதெனில்,

1. உரிய ஊடக நிறுவனங்களின் உறுப்பினர்களை வரவழைத்து அது தொடர்பாக அறிவூட்டுதல்.
2. ஊடக நிறுவனங்கள் ஒரு அரசியல் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் சார்பாக செயற்படுவதாக ஆணைக்குழுவினால் பகிரங்கமாக தெரிவித்தல்.
3. இந்த நிலைமை தேர்தலின் வெளிப்படைத்தன்மைக்கு தடைகளை ஏற்படுத்துவதால் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் அல்லது முடிவுகளை ஒளிபரப்புவதற்காக நேரடியாக இணைத்துக் கொள்ளாதிருத்தல்.
4. இனங்காணப்பட்ட ஊடாக நிறுவனங்களுக்கு ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஊடக அமைச்சுக்கு அல்லது தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுதல், மற்றும்
5. ஊடக நிறுவனங்கள் தொடர்பான விடத்து, அரச ஊடக நிறுவனத் தலைவலர்களுக்கு அறிவித்து உரிய ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிவித்து அதற்காக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

## சமூக ஊடகங்கள்

தேர்தல் சட்ட மீறல்கள், நிகழ்ந்த வன்முறைச் செயல்களின் எண்ணிக்கை, ஊடக வகிபாகம் மற்றும் சிறந்த தேர்தலொன்றின் பிரதான அளவுகோலாக தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடகங்களின் நடத்தை என்பதை புதிய போக்கொன்றாக் தேர்தல் செயற்பாடுகளினுள் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு தேர்தலாக 2020 பாராளுமன்றத் தேர்தலைக் குறிப்பிட முடியும். சம்பிரதாய தேர்தல் அவதானிப்புக்களுக்கு சவாலாக மாறி தேர்தல் சட்ட மீறல்கள், சமூக ஊடகங்களின் பயனர் தரங்களை மீறுதல் மற்றும் தேர்தல்

பிரச்சார செலவு தொடர்பாக தகவல் மற்றும் முறைப்பாடுகளை வழங்குகின்ற ஊடகமொன்றாக சமூக ஊடகங்கள் தேர்தல் காலப்பகுதியில் விசேட வகிபாகத்தை வகித்தன. நாள் ஒன்றுக்கு 300 அமெரிக்க டொலர் வரை செலவு செய்து தமது பிரச்சார நடவடிக்கைகளுக்காக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு வேட்பாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அவ்வாறே அமைதிக் காலத்திலும் மற்றும் அதன் முன்னரும் சமூக வலையமைப்பு சார்ந்த இனங்காணப்பட்ட தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 5,236 முறைப்பாடுகள் வரையில் அறிக்கையிடப்பட்டன. பொது சமூக இடைவெளியிலும் கூட பயனர் வசம் முழுமையான கட்டுப்பாடு உள்ளது என்ற நிபந்தனையில் அடிப்படையில் இருந்து கொண்டு சம்பிரதாய பிரச்சார உபாயக் கட்டுப்பாட்டுக்காக உள்ள சட்டங்களை சமூக ஊடக வலையமைப்புத் தொடர்பிலும் பயன்படுத்திக் கொண்ட போதிலும், வேட்பாளர் அதிகளவு போட்டியிடுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய சட்டச் சட்டகம் அல்லது தொழில்நுட்ப வரையறைகள் போதுமானதல்ல என்பது தெளிவாக உறுதியாகியது. விசேடமாக அமைதிக் காலத்திற்குள் ஏனைய பொது ஊடக இடைவெளி தேர்தல் பிரச்சாரத்திற்கு செயலிழக்கச் செய்யப்பட்ட போதும் சமூக ஊடகங்களை செயலிழக்கச் செய்வதற்கு அல்லது ஏதேனுமொரு கட்டுப்பாடுக்குள் கொண்டு வருவது கூட மிகவும் கடினமான சவாலமிக்கதாகும். இந்த நிலைமை தொடர்பில் ஏதேனுமொரு கட்டுப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக முதலில் அமைதிக் காலத்திற்குள் சமூக ஊடகங்கள் தேர்தல் பிரச்சார அறிவித்தல் மற்றும் ஏனைய ஒழுங்கமைக்கப்பட்ட பிரச்சாரங்களைத் தவிர்ப்பதற்காகத் தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக சமூக வலையமைப்பு உரிமையாளர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வருதல் வேண்டும். தேர்தல் காலப்பகுதியின் போது சமூக வலையமைப்புப் பயன்பாடு தொடர்பாக வேட்பாளர்கள், கட்சிகள்% குழுக்கள், அரச அலுவலர்களை அறிவூட்டல் செய்வதை அதிகரிப்பது காலத்திற்குப் பொருத்தமாகும். இறுதியான உபாயமொன்றாக சமூக வலையமைப்புக்கள் ஊடாக இணங்காணப்பட்ட குறித்த தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை பொலிஸார் உறுதி செய்து வெளிக்காட்டுதல் வேண்டும்.

**2020.08.02 ஆம் திகதி தொடக்கம் 2020.08.05 ஆம் திகதி வரையிலான அமைதிக் கால எல்லையினுள் அறிக்கையிடப்பட்ட சமூக ஊடகத் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள்**

| திகதி | பிரிவு | முகப்புத்தக நிறுவனத்திடம் அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் | நீக்கப்பட்ட பதிவுகளின் மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 2020.08.02 திகதி நள்ளிரவு 12 முதல் 2020.08.05 திகதி வரை அமைதிக் காலம் (அறிவித்தல்) | Ads அறிவித்தல் | 2873 | 2873 | 100வ |
| | (தேர்தல் சட்ட மீறல் என இனங்காணப்பட்ட முறைப்பாடுகள்) | 1766 | 1732 | 98வ |
| | மொத்த எண்ணிக்கை | 4639 | 4605 | 99வ |

பைலம VI

**( மூலாதாரம்: முகநூல் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள்)**

## மதத்தலங்கள் மற்றும் மத நிகழ்ச்சித் திட்டங்கள்

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் தகாத செல்வாக்கு எனக் கொள்ளப்படுகின்ற மத நிகழ்ச்சித்திட்டங்களின் போது அல்லது மதத்தலமொன்றில் நிகழ்த்தப்படும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாக பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றன. தனிப்பட்ட ஆன்மீக நம்பிக்கையை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் மத அலுவல்களின் போது அவர்கள் நம்பிக்கை வைத்துள்ள மதத்தலைவர்கள் அல்லது அவர்களால் புனிதமாக கருதப்படும் இடமொன்றில் அல்லது ஏதேனும் ஒரு அரசியல் ஈடுபாடு தொடர்பில் தூண்டும் அல்லது அத்தகைய ஏதேனுமொன்றிலிருந்து விலகுவதற்காக நிகழ்த்தப்படும் செல்வாக்கு பாரிய குற்றமொன்றென இனங்காணப்பட்டதோடு அதற்காக குற்றவாளியாகுதல் தனது பதவி இல்லாதொழிதலுக்கு மட்டுமன்றி குடியுரிமையை (பிரஜாவுரிமை) 6 ஆண்டுகள் வரை இல்லாதொழிவதற்கான தண்டனை உரித்தாகுமெனப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமயம் அல்லது மதத்தலங்களை பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துவது தேர்தல் சட்டத்தில் குற்றமாகுமென்பதோடு அது அரசியல் ஒழுக்கத்தை கேள்விக்கு உட்படுத்துகின்ற பாரிய ஒழுக்கநெறி பிரச்சினையுமாகும். நம்பிக்கை என்பது எப்போதும் தர்க்க ரீதியான பயன்பாட்டிலிருந்து அப்பாற்பட்ட தனிப்பட்ட ஒப்பீட்டு உண்மையென்பதோடு அவ்வாறான ஈடுபாடுடைய நபர் ஒருவரை தந்திரமாக லௌகீக அரசியல் விடயங்களுக்காக தூண்டுவது என்பது ஒழுக்கநெறி அடிப்படையில் தகாத மோசடி எனக் குறிப்பிட முடியும். இவ்வாறான சட்ட மீறல்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்திய பின்னர் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவித்து பொலிஸாருக்கு 11 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டன. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையாக சர்வ மதத் தலைவர்களை அறிவூட்டல் ஊடாக, அமைச்சு மட்டத்தில் அனைத்து மதத்தலங்களையும் அறிவூட்டல் மற்றும் பிரச்சார அறிவித்தல்களைத் தயாரித்து பிரச்சாரம் செய்தல் போன்ற உபாயங்கள் மூலம் பொதுமக்கள், வேட்பாளர்கள் கௌரவ மதகுருமார்களை அறிவூட்டல் செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒழுக்க நன்னெறி சார்ந்த வாசிப்பு அடிப்படையில் இவ்வாறான சம்பவங்கள் பாரிய தவறாக உள்ளபோதிலும் இந்த சம்பவங்களால் மோதல் உணர்திறனைக் கருத்திற் கொண்டு தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பெரும்பாலானவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஆதலால் இது தொடர்பாக தொடர்ச்சியான அறிவூட்டல் மற்றும் இனங்காணப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் என்பது இருமுறையிலும் சமநிலைப்படுத்துவதற்காக செய்ய வேண்டிய இரண்டு பணிகளாகும்.

## அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்

இலங்கை அரசியல் யாப்பின் 104 எ எ உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் காலப்பகுதியினுள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஆதனங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக கட்டளைகள் விதித்தல் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேறகொள்வதற்கும் அவற்றுக்கு உட்பட்டு நடப்பதற்கும் அரச உத்தியோகத்தர்கள் கட்டுப்பட்டுள்ளனர். அரச ஆதனங்கள் என்பதை பௌதீக மற்றும் மனித வளங்கள் ஆகியவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாததோடு அரசியல் உரிமை இழந்த உத்தியோகத்தர்கள் கடமை இல்லாத காலத்தில் கூட மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் மற்றும் பதவி பெயர்கள் போன்றே பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களின் கடமைக் காலமும் அதற்குள் அடங்கும். இவ்வாறு அரச வளங்களை தேர்தல் கால எல்லைக்குள் விசேடமாக இனங்காண்பதற்கான தேவைப்பாடு ஏற்படுவது, அரச ஆதனங்களைக் நிருவகித்தல் தொடர்பான அதிகாரம் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் வரையறுக்கப்பட்ட சிலருக்கு மாத்திரம் கிடைப்பதால், அதனைத் தீர்மானித்தல், தனது பதவிப் பெயரைப் பயன்படுத்தல், அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் உத்தரவு பிறப்பித்தல் அல்லது அசையாத அல்லது அசையும் சொத்துக்களைப் பயன்படுத்தல் என பல்வேறு முறைகளில் அமைய முடியும். ஏதேனுமொரு பதவியை வகிப்பதன் காரணத்திற்காக பொதுமக்களுக்குச் சொந்தமான வளங்களைத் தனது தனிப்பட்ட தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது பாரிய குற்றமொன்றாக இனங்காணப்படுவது அதன் காரணத்தினாலேயேயாகும். இது பிரதானமான முறைப்பாடாக அமைந்தது, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தனது பதவியை இழந்த இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் தமக்குரித்தாக இருந்த வாகனங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்துவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளாகும். இது தொடர்பாக முழுமையான தலையீடொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டதோடு பணம் செலுத்தி வாகனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில் வெளியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும், வாகனங்களை ஒப்படைப்பதற்கான சலுகைக் காலமொன்றைப் வழங்கி அதன் பின்னரும் வாகனங்களை கையளிக்காதவர்கள்

தொடர்பாக அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து பொலிஸாருக்கு தகவல்கள் அறிக்கையிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, பட்டதாரி நியமனம் வழங்கல், அரச தொழில் வழங்குவதாக வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளப்பட்ட அறிவூட்டல். கொவிட் உதவி விநியோகித்தலின் போது தோன்றிய அரசியல் சுபாவத்திலான தலையீடு தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாகவும் விசேட முக்கியத்துவத்துடனான தலையீடுகளைச் செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இது சாதாரண அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களாக செயற்பட்டுக்கொண்டு பதவிகளிலிருந்து லீவு பெற்றுக் கொள்ளாமல் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தனது பதவியிலிருந்து விடுமுறை பெற்றுக் கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது எவ்வாறாயினும் இந்த முடிவை சவாலுக்குட்படுத்தி செயற்பட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதோடு தனது நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக வேறு அலுவலரொருவருக்கு கையளித்து லீவு பெற்றுக் கொள்ளாமல் தேர்தலில் போட்டியிடும் அவர்களின் முன்மொழிவை மற்றும் பின்னர் தேர்தல் ஆணைக்குழு இணங்கியது.

அரச வளங்கள் என்பது ஒரு வகையில் பொதுமக்களுக்குச் சொந்தமான ஆதனமாகும். அது தொடர்பாக தற்காலிகப் பொறுப்பைக் கொண்டுள்ள அரசியல் அதிகார சபை அல்லது அரச அலுவலர் அந்தச் சொத்தை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவது என்பது பாரிய வகையான பொறுப்புகளை உதாசீனப்படுத்தல் என்பதோடு பொதுமக்கள் வளங்கள் தொடர்பில் காட்டுகின்ற கவனிப்பையும் அது சிறந்த முறையில் வெளிக்காட்டுகின்றது. பிரதிநிதிகள் சனநாயக முறையொன்றினுள் மக்கள் பிரதிநிதிகளாக முன்வருகின்ற நபரொருவர் அல்லது குழுவொன்று அதிகாரத்தைப் பெற்று கொள்வதற்காக அரச ஆதனங்களை துஷ்பிரயோகம் செய்வார்களாயின் அது தெளிவாக தேர்தல் காலப்பகுதிக்கு மாத்திரம் செல்லுபடியாகும் காரணமொன்றாகக் வரையறுக்க முடியாது. அரச உத்தியோகத்தர்கள் என்பது பொதுமக்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டு தொழிலில் ஈடுபடுவதோடு மறுபக்கத்தில் தேர்தலொன்றின் போது தேர்தல் கடமைகள் தொடர்பாகவும் சம்பந்தப்படுகின்ற அதிகாரிகளாவர். தேர்தலொன்றின் தூயதன்மையை தீர்மானிக்கும் பிரதானமான காரணியான உத்தியோகத்தர்களின் பக்கச்சார்பின்மை என்ற விடயம் அரச ஆதனங்களை முறையின்றிப் பயன்படுத்துவதற்கு உடந்தையாக இருந்த உத்தியோகத்தர் ஒருவர் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படல் பாரியதொரு விளக்கம் கோரலுக்கு உட்படக் கூடிய ஒரு விடயமாகும்.

## தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்வதற்காக தனது பணிகளை வரையறை செய்து கொள்ளல்

தேர்தல் தொழிலாளர் ஒருவரின் பணிப்பொறுப்பு வாக்குப் பெட்டிக்கு மாத்திரம் வரையறுக்கப்படல் கூடாது. தேர்தலொன்று என்பது சனநாயக சமூகத்தில் அபிவிருத்தியடைந்த சமூகப் பயன்பாடொன்றென்பதோடு தேர்தலொன்றை நடாத்துவதன் முழுமையான விளைதிறனை பெற்றுக்கொள்வதற்கெனில் நடாத்தப்படுகின்ற தேர்தலொன்று எப்போதும் நீதியான மற்றும் சுதந்திரமான சூழலில் நடாத்தப்படல் வேண்டும். அதாவது ஒரு புறம் அது எழுதப்பட்ட சட்டமொன்றில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு தேர்தல் போட்டிக் களம் அனைவருக்கும் சமமான, மிகவும் திறந்த மற்றும் கவனம் உள்ளடங்கும் விதமாக செயற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் முக்கியமாகும். மக்கள் சமூகமொன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான சட்டகமொன்றிட்குள் எடுத்தல் மற்றும் அவ்வாறு எழுத்து மூலமாகவுள்ள சட்டத்தை மீறுவதற்கான குறித்த தண்டனைகள் விதிக்கப்பட்டு இருப்பது சம்பிரதாய சட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதாகும். ஆயினும் ஏதேனும் ஒரு நிலைமையின் கீழ் மேற்படி சட்டத்திற்கு கட்டுப்படாதிருத்தல் அல்லது சட்டத்தை மீறுவதற்காக தண்டனைகள் விதிக்கப்படவில்லையெனில், அத்தகைய எழுத்துமூல சட்டத்தினால் எவ்விதமான பயனும் இல்லை. சட்டத்தை நடைமுறைரீதியாக செயற்படுத்தாத வரை அதனை ஒருபுறம் உதாசீனப்படுத்துகின்ற மக்கள் தரநிலையாக மாறுவதோடு சில தரப்பினருக்கு அது அடக்குமுறை துன்புறுத்தல்களை உருவாக்கும் உபகரணம் ஒன்றாகவும் செயற்பட முடியும். சட்ட அமுலாக்கம் செய்வதற்காக குறித்த அதிகாரம் கையளிக்கப்பட்ட நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளதோடு அவற்றின் செயற்பாட்டின் அளவு சட்டத்தின் ஆதிக்கத்தை தீர்மானிக்கும் மற்றுமொரு பிரதானமான காரணியாகும். இந்த சகல விடயங்களும் மிகவும் நன்றாக இடம்பெறுகின்றன என்ற எடுகோள் ஒன்றின் அடிப்படையில் அமைந்துள்ள தேர்தலொன்றில் நீதியான மற்றும் சுதந்திரமானதென்பதை ஏற்படுத்தல் எழுத்து மூலமான சட்டத்திற்கு மாத்திரம் வரையறை செய்தல் எந்தளவு நடைமுறைச் சாத்தியமானதென்பதை இந்த தேர்தலில் போது சிறப்பான முறையில் உறுதி செய்து காட்டப்பட்டது. அதற்கு பிரதான காரணம் மிகச் சிக்கலான உபாயங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தற்போதைய தேர்தல் பிரச்சார உபாயங்கள் 1981 போன்ற நீண்ட புராதன காலமொன்றின் போது நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றினால் எந்தளவு உள்ளடக்க முடியும் என்ற விடயமாகும். இதற்கு சான்று பகர்ந்து தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் முன்னே நிர்வகிக்கக் கூடியதாக இருந்தது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாதாரன அல்லது சிறிய மட்டத்தில் தேர்தலுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என இனங்காணப்பட்ட குறித்த சம்பவங்கள் மாத்திரமே ஆகும். தேர்தல் நீதி (Electoral Justice) தொடர்பாக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து யாதெனில், நம்பத்தகுந்த (Credible) அல்லது முழுமையான தேர்தல் பிணக்குத் தீர்த்தல் வழிமுறையொன்று தாபிக்கப்படுவதற்கெனில் தேர்தல் பிணக்குத் தடுத்தல் (revention) நிறுவன/ சட்டரீதியான கட்டமைப்பின் உரிய செயற்பாடு (Institutional) மற்றும் மாற்று வழிமுறைகள் (Informal/Alternative) ஆகிய முப்பிரிவுகளும் சமமாக உள்ளடங்கிய செயற்பாட்டிற்காகும்..

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் 66 முதல் 90 வரையான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்தல் தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டமுரணான செயல்கள் தொடர்பாகக் குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியுமென்பதோடு, நடவடிக்கைகள் அது தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள இலங்கை பொலிஸார் மூலமாகவே எடுக்கப்படுகின்றது. அவர்கள் எந்தளவு தூரம் மேற்படி சட்டத்தை செயற்படுத்துவது அல்லது அதற்கு இடமளிப்பது என்பது இதன் வெற்றியின் பிரதான காரணமாகும். ஆயினும் எழுத்து மூல சட்டம் எப்போதும் மிகவும் சிறந்த வழிகாட்டலை மேற்கொள்வதோடு அதனை மீறுவது குறித்த தண்டனைக்கு உட்படுகின்ற ஒரு செயற்பாடு என்பதனால் அதனைத் தழுவி நடப்பதற்கு அழுத்தம் கொடுப்பது ஒவ்வொரு தரப்புத் தொடர்பிலும் முழுமையாக ஏற்படுத்துகின்றது அங்கு உரிய செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஆலோசனை ரீதியான மற்றும் வழிநடாத்தல் தலையீடு செய்யும் வாய்ப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது.

தேர்தல் பிணக்குகளைத் தடுப்பதற்காக (Prevention) மூன்று விதமான தலையீடுகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு செய்ய முடியும். அதாவது ஆரம்ப மட்டத்தில் மோதல் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களை அடையாளம் காணல், தொழிபாட்டு ரீதியாக அதற்காகத் தலையீடு செய்தல் மற்றும் இனங்காணப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுப்பதாகும். இடைநிலை மட்டத்தில் தவிர்த்தல் என்பது அந்த மோதல் நிரலாக அல்லது நிரையாக அதிகரிப்பு பரவலைத் தடுத்தல் மற்றும் அதன் மூலம் ஏற்படுகின்ற சேதங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகும். மூன்றாம் நிலைக் மட்டத்தில் பின்னர் மோதல்களின் விளைவுகளாக ஏற்படக்கூடிய நிலைமைக்கு தீர்வுகளை மேற்கொள்வதாகும். தேர்தல் ஆணைக்குழுவினால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரச ஆதனங்கள் சார்ந்த துஷ்பிரயோகம் தொடர்பான செயற்பாடுகளைக் கட்டுப்பாடு செய்வதற்காகத் தவிர்த்தல்

செயற்பாடுகள் பாரியளவில் பயன்படுத்தப்பட்டதோடு அதற்கான வர்த்தமானி அறிவித்தலுக்கு மேலதிகமாக 59 அறிவுறுத்தல் கடிதங்கள் வெளியிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக எச்சரித்தல், களப் பரிசீலனை மற்றும் அதனோடு தொடர்புடைய பெரும்பாலான அறிவூட்டல் மூலம் தவிர்த்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற பெரும்பாலான நடைமுறைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாற்று வழிமுறைகள் அல்லது மாற்று பிணக்குத் தீர்வு Alternative Dispute Resolution என்பது நீதிமன்றம் அல்லது குறித்த நியாய அதிகார சபை தவிர்ந்த ஏனைய அனைத்து கலந்துரையாடல் தலையீடு, பிணக்குத் தீர்வு வழிமுறைகளைச் செயற்படுத்தல் . இவ்வாறான செயற்பாடுகள் பெரும்பாலும் முடிவடைவது தரப்புக்களுக்கு இடையிலான எழுத்து மூல/ எழுத்து மூலமற்ற Agreements இணக்கப்பாட்டின் அடிப்படையிலாகும். தேர்தலைத் நடத்துவதற்காக முழுமையான அதிகாரம் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவுக்கு அது தொடர்பாகக் காணப்படுகின்ற சட்டரீதியான ஆதிக்கம் மேவிச் சென்ற எப்போதும் விசேட நிபுணத்துவம் தேர்தல் முகாமைத்துவம் தொடர்பாக உள்ளது. அது தேர்தல் தொழிலினுள் சில காலமாக கட்டியெழுப்பப்படுகின்ற அமைதியான அறிவு (Tacit knowledge) அடிப்படையில் தாபிக்கப்பட்டதாகும். மேற்படி அறிவைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு நிகழ்வு பற்றி பொருண்நிலையான விதத்தில் முக்கியமானதாகக் கருதப்படும் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் விதிமுறையான மற்றும் விசேட அவதானிப்பை மேற்கொள்ள முடியும். இது "சாத்தியமான மதிப்பீட்டு முறைமை" எனப்படும் "எஸ்ப்ரோ' (ASPRO) என அழைக்கப்படுவதோடு பகுப்பாய்வு தீர்மானங்கள் தொடர்பில் நீதியான பெறுமதி எப்போதும். கிடைக்கும். எவ்வாறாயினும் தேர்தல் என்பது ஒரு உத்தியோகத்தர் குழுவின் பணி மாத்திரமல்ல அது எப்போதும் அதனோடு தொடர்புபடுகின்ற ஒவ்வொரு தரப்புக்களதும் கூட்டுச் செயற்பாடாகும். போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் என்பது தேர்தலொன்றில் பிரதான தரப்பினர் என்பதோடு அவர்கள் தொடர்பிலான அனுதாபம் ஒவ்வொரு முடிவுகளின் பின்னாலும் இருப்பதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு தொடர்பில் தரப்பினரின் கடப்பாட்டை அதிகரிக்கின்றது. மேற்படி விடயத்தை ஆராய்ந்து பார்த்து எஸ்ப்ரோ முறை மீது அடிப்படையில் இவர்களோடு சட்டத்தின் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் மீது மோதல் ஏற்படுவதைத் தடுப்பதற்கான இனக்கப்பாடுகளுக்கு வருவதற்காக ஒருங்கிணைந்த பேரம் பேசுதல் (Integral Bargaining) வழிமுறையைப் பயன்படுத்த முடியும். அதாவது தரப்புக்களுக்கு இடையில் அன்னியோன்ய பங்களிப்போடு கலந்துரையாடுவதாகும். அனைவருக்கும் நன்மைகளைப் ஏற்பாடுசெய்து கொண்டு பொது நோக்கம் அல்லது எதிப்பார்ப்புக்களை அடைந்து கொள்வதற்காக மாற்றங்கள மேற்கொள்ளப்படுகின்றன. "ஹேமந்தவின் விதி" இவ்வாறான மாற்றம் செய்யக்கூடிய பயன் எப்போதும் ஒரு விடயத்தில் நிபுணத்துவம் கொண்ட தேர்தல் தொழிலாளர்களுக்கு உரித்தாகும். எனவே முழுமையான தேர்தல் நீதியை தேர்தல் காலப்பகுதியில் ஏற்படுத்துவதற்கெனில் இந்த மூன்று பிரிவுகளும் சமமாகச் செயற்படுதல் கட்டாயமாகும்.

2020 பாராளுமன்ற தேர்தலுக்குரியதாக இந்த மேலே இனங்காணப்பட்ட மாற்று மற்றும் தவிர்த்தல் வழிமுறைகளைக் கவனத்தில் கொள்ளாது விட வேண்டும் எனவும் தேர்தல் சட்டங்களை செயல்வலுப்படுத்தல் மூலம் மாத்திரம் தேர்தல் நீதியை அடைந்து கொள்ளல் வேண்டும் எனவும் என்ற கருத்தொன்று எழுந்தது. மேற்படி கருத்து பிரதானமான விடயமாக எழுந்த காரணத்தால் மேலே இனங்காணப்பட்ட பெரும்பாலான பிணக்குத் தீர்த்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் அனைத்துத் தரப்பினர்களாலும் கைவிடப்பட்டது. அத்தகைய நிலையில் எப்போதும் நன்மைகளைப் பெற்றுக் கொண்டது அதிகாரம் மற்றும் செல்வம் ஆகியவற்றை உரித்தாக்கிக் கொண்டவர்கள் மாத்திரம் என்பதோடு சிறிய அல்லது அதிகாரம் இழந்த வேட்பாளர்கள் தேர்தல் போட்டிக்களத்திலிருந்து எப்போதும் வெளியேறும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. அல்லது தேர்தல் தொழிலாளர்கள் அவர்களுடைய பணிஒழுங்கமைப்பு (logistric) அல்லது சட்ட வரம்புகளை மாத்திரம் வரையறுத்துக்கொள்வது தொழில்சார் அடிப்படையில் தனது பணிகளை சுயமான வரையறுக்கு உட்படுத்தல் (சுருக்கிக் கொள்ளல்) ஒன்றாவதோடு தனது பொறுப்புக்களின் பிரதான பகுதியிலிருந்து வெளியேறும் நிலைமை ஒன்றெனவும் எனவும் பொருள்கோடல் செய்ய முடியும்.

## தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவம் என்பது தேர்தல் பிணக்குத் தீர்த்தல் அன்று.


தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவம் என்பது ஒரு குறிப்பான காலப்பகுதியில் ஆரம்பித்து, ஒரு குறிப்பான சட்டம் மற்றும் அதற்கான தண்டனைகள் பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு, முன்கூட்டியே இனங்காணப்பட்ட வழிமுறைக்கமைய (அதாவது முறைப்பாடுகளைக் கையேற்றல், அறிக்கை வைத்திருத்தல், தேவையான ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்புதல், முறைப்பாடுகளை முடிவுறுத்தல் ஆகிய முறைப்பாட்டு முகாமைத்துவ செயற்பாடுகளாகும்) தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்த பின்னர் அவை முடிவடையும் வரை மேற்கொள்ளப்படும் உரிய செயல் ஒழுங்குகளாகும். இந்த பணிக்காக முகாமைத்துவ திறமை கொண்ட செயல் ஒழுங்குகள் பற்றிய புரிந்துணர்வுடைய எந்தவொருவருக்கு செய்யக்கூடிய பணியாகும். எனினும் தேர்தல் பிணக்குத் தீர்த்தல் என்பது அதற்கு அப்பாற்பட்ட பிணக்குத் தவிர்த்தல், அஃவற்றின் தீவிரத்தன்மையைக் குறைந்தல் அல்லது கட்டுப்படுத்தல், சமரசம் செய்தல் அல்லது ஒன்றுபடுத்தல், ஒழுங்குகளையும் மற்றும் தரங்களையும் விதித்தல், ஆழமான வகையில் ஒவ்வொரு தரப்பினருக்கும் நியாயம் ஏற்படும் வகையில் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்தல் ஆகிய பணிகளை உள்ளடக்கிய விரிவான பணியாகும். பிணக்குத் தீர்த்தல் எப்போதும் சவால் மிக்கதாக அமைவதோடு தனது தனிப்பட்ட திறமைகள், தேர்தல் நிபுணத்துவம், மோதல் தவிர்ப்புத் திறமை மற்றும் ஆக்கபூர்வமாக முகம்கொடுத் ஆற்ற வேண்டிய பணியாகும். உதாரணமாக ஒரு விடயம் பற்றி இரணடு குழுக்களுக்கிடையிலான இனக்கப்பாடிண்மையை சமரசம் செய்வதற்காக அதிக களைப்பு மற்றும் தியானம் (Mediation) தொடர்பான திறமை இருத்தல் வேண்டும். தொழில் தேர்ச்சியை சவால்மிக்க தருணத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்தல் என்பது எப்போதும் தமது தொழில் பரப்புக்கு அப்பால் பயனை அடைந்து கொள்ளக் கூடிய கட்டாயத் தேவைப்பாடொன்றாகும். ஆகையால் தேர்தல் நீதி அல்லது நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை உறுதி செய்தல் என்பது தேர்தல் சட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்ற எண்ணக்கருவிற்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென எதிர்பார்கிறேன்


**Reference**

- Report, 2020 - Parliamentary Elections, Sri Lanka, Election Dispute Resolution Unit, Election Commission of Sri Lanka (2020)
- Conflict – Glossary and Thesaurus (Sinhala Medium), K N O Dharmadasa, (2005)
- International Obligations for Electoral Dispute Resolution Discussion Paper1, February 24 -25, 2009: https://www.cartercenter.org/resources/pdfs/peace/democracy/des/edr-approach-paper.pdf,
- Identifying International Principles for Resolving Election Disputes, Ipp, O., & Hoverter, T. F. (2005
- The Possibility of Using Alternative Dispute Resolution for Election Law Disputes, Becerra, J. (2018)
- Electoral Dispute Resolution: The Need for a New Sub-Specialty. Foley, E. B. (2012)
- Many Doors--Closing Doors--Alternative Dispute Resolution and Adjudication, Resnik, J. (1994).
- Electoral justice: The international IDEA handbook. International IDEA, Henríquez, J. D. J. O., Ayoub, A., & Ellis, A. (2010)

# பாராளுமன்ற ஜனநாயகம்

சுனில் குமாரசிங்க அத்துகோரள*



மனிதன் தனது பரிணாம வரலாற்றில் நீண்டதொரு காலத்தை கோத்திரங்களாகவே வாழ்ந்துள்ளான். அவர்களிடம் காணப்பட்ட ஒத்துழைப்புடனான வாழ்க்கையானது அவர்களது தொடர்ச்சியான இருப்புக்கு காரணமாகியதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். நிர்வாணமாக வாழ்ந்த மனிதன் படிப்படியாக பழக்க வழக்கங்கள், கலாசார மாற்றங்கள் சம்பந்தமான உணர்வு பூர்வமான விடயங்களில் ஈடுபடுகின்றான். ஒவ்வொரு கலாசாரங்களும் ஏற்றுக்கொண்ட விதத்தில் அவற்றைப் பேணி வருவதற்கு அவன் பழகிக்கொண்டான். மனிதன் சமூகத்துடன் இணைந்தே வாழ்கின்றான். கட்டாயமாக ஒற்றுமையாக வாழ வேண்டிய மனித வாழ்க்கை முறை அழிந்துவிடாதிருப்பதற்கும், வெற்றிகரமான வாழ்க்கை முறைக்கும் இனப்பெருக்கம் போன்ற விடயங்கள் காரணமாக மனிதர்களுக்கு ஒற்றுமையாக சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டியேற்பட்டது. ஆனாலும் ஏற்பட்ட சமூக மாற்றத்துடன் மனிதர்களிடத்தில் நிலவிய ஒற்றுமையும் மாற்றத்திற்குட்பட்டது. நாகரீகமடைந்த மனிதன் பண்டைய காலந்தொட்டே பல்வேறு மாற்றங்களுக்குட்பட்ட வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபட்டுள்ளான். மனிதனும் ஒரு விலங்காக இருந்தாலும் நீண்ட காலமான சமூகமயமாக்கல் ஊடாக அவனிடத்தில் ஏற்படும் மதிப்பளித்தல் சம்பந்தமான புரிந்துணர்வு காரணமாக ஆன்மீக உணர்வுள்ள விலங்கினமாக சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டான்.

இதுவரை ஏற்பட்டுள்ள சமூக மாற்றத்திற்கான காரணங்கள் பற்றி அறிந்துகொள்ளல் இந்தத் தலைப்புடன் மிகவும் தொடர்புடையதாகும். 16 ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் அரசியல் புரட்சிகள் ஆகியவற்றின் பெறுபேறாக மேற்கு ஐரோப்பாவில் பகுத்தறிவு முதலாளித்துவம் தோன்றிமையும் அதனைச் சிறப்பாகப் பேணி வருவதற்காக ஜனநாயக நிர்வாக முறை உருவாகியமையும் எனும் நிகழ்வுகள் இதுவரை ஏற்பட்டுள்ள சமூக மாற்றம் மீது தாக்கம் செலுத்திய முக்கிய காரணங்களாகும்.

19 ஆம் நூற்றாண்டில் இலங்கை பிரித்தானியாவின் ஆக்கிரமிப்புக்குட்பட்டதன் பின்னர் ஆங்கிலேயர் ஏற்படுத்திய தாக்கம் ஏனைய நாட்டவர்களைப் பார்க்கிலும் (போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரைப் பார்க்கிலும்) அதிகமாக இருந்தது. சுயாதீன நாடொன்றாக எழுந்து நிற்காமல் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்ட உள்நாட்டு ஆட்சியாளர்களின் கீழும் 1796 இன் பின்னர் ஏற்பட்ட முதலாளித்துவத்தின் தோற்றத்தை மிகுந்த முயற்சியுடன் முன்னெடுத்துச் சென்ற நடவடிக்கையே நிகழ்ந்தது.

அதற்கிணங்க, அந்த நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியின் பெறுபேறாக காலனித்துவ ஆட்சி மறைந்து முதலாளித்துவப் பொருளாதார முறை ஏற்பட்டது. தாராண்மைவாதம், பயனெறிமுறைவாதம், இரக்ககுணவாதம் (Compassionateism), சுவிசேஷவாதம் (Evangelicalism) ஆகிய தத்துவவாதங்களினூடாக ஆங்கிலேயர் அவர்களின் கீழ் நிலவிய ஆசிய நாடுகளில் புதிய ஆட்சி முறையொன்றை ஏற்படுத்தினர். அப்போது இங்கிலாந்து கைத்தொழிற் புரட்சி (கி.பி. 1760 – 1830) காரணமாக உலகின் பிரபல நாடாக இருந்தது.

20 ஆம் நூற்றாண்டின் உதயத்துடன் இலங்கையின் தேசிய இயக்கத்தில் பொது மக்களின் பங்கேற்பு மிகவும் வரையறுக்கப்பட்டிருந்ததைப் போன்றே அந்த இயக்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்றிருந்த இலங்கை மத்தியதர வர்க்கத்தினர், அன்று அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான போராட்டங்களின்போது பொது மக்களைப் பற்றிப் பேசினாலும் அந்தப் போராட்டங்களில் பொது மக்களை பங்கேற்கச் செய்யவில்லை. 1911 சனத்தொகை கணக்கெடுப்பு அறிக்கையை தயாரித்த டென்ஹெம் அவர்கள் இலங்கை மத்திய தர வர்க்கத்தினர் பற்றி வெளியிட்ட கூற்று இதனை உறுதிப்படுத்துகின்றது.அதாவது, அவர்கள் அனைவரும் ஆங்கில மொழியில் கல்வியைப் பெற்றுள்ள போதிலும் நாட்டு மக்களுக்கு தாய் மொழியில் அறிவார்ந்த உரையொன்றை நிகழ்த்த முடியாத நிலையில் இருக்கின்றார்கள் என்பதாகும். அண்டைய நாடான இந்தியா 1885 ஆம் ஆண்டில் துவங்கிய இந்திய தேசிய சங்கம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வழியில் மக்களை வழிநடாத்துவதற்கு பாரிய முயற்சியொன்றை மேற்கொண்ட போதிலும் இலங்கை மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் தமது எதிர்ப்பு போராட்டங்களுக்கு உயிரூட்டுவதற்காக பொது மக்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கு ஆர்வம் காட்டவில்லை என்ற விடயம் யாவரும் அறிந்ததே. ஆனாலும் பிந்திய காலங்களில் இந்த விடயத்தில் ஓரளவு மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் ஆங்கிலேயரின் ஆட்சியின் நீட்டிப்பொன்றாக தமது ஆட்சியை மேற்கொள்வதற்கே இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டினர்.

"அனைத்து இனத்தவர்களும் கல்வி மட்டத்தில் சர்வதேச மட்டத்திற்குப் பொருத்தமான அரசியல் முறையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு முயற்சி செய்தல் வேண்டும். அதன் காரணமாக பெரும்பான்மையானோருக்கு எந்த விதமான உரிமைகள் இல்லாதிருப்பதனாலும் அவர்கள் சிறிய எண்ணிக்கையினரான தனவந்தர்களால் பாதிப்புக்குட்படுபவர்களாக இருந்தமையினாலும் மறுபுறமாக பெரும்பான்மையான உரிமையாளர்கள் மற்றும் பொதுவான பொருளாதார மட்டம் உயர் மட்டத்தில் நிலவும் நாடுகளிலிருந்து அந்த முறைக்கு சிறியளவு வரவேற்பும் கிடைப்பதனால் கம்யூனிஸ முறை மக்களை கவர்ந்திழுத்தது. ஆயினும் எந்த வகையான அரசியலமைப்பு சிறந்தது, சிறந்ததில்லை என்ற பொதுத் தீர்மானமொன்றை எடுக்க முடியாமைக்கான காரணம், மக்களின் அறிவு மற்றும் கல்வி மட்டத்தை உயர்த்துதல் மற்றும் பொதுவான சௌபாக்கியத்தை ஏற்படுத்துவதற்காக நிபந்தனைகளற்ற இணக்கப்பாடு நிலவுவதனாலாகும்" எனக் கூறும் 'தயிவெகு இகெதா' எனும் தத்துவவியலாளர் மேலும் குறிப்பிடும்போது "தேசமொன்றுக்கு உயர் மட்டத்திலான புலமை மற்றும் கல்வி மட்டம் மற்றும் பொருளாதார ரீதியிலான சௌபாக்கியத்தை ஏற்படுத்த முடியுமான சிறந்த அரசியல் முறை எது? தெரியும் வகையில், இது சம்பந்தமான நிகழ்காலத்தின் ஒன்றிணைந்த கருத்து ஜனநாயக ஆட்சி முறை என்பதாகும்." எனக் கூறும் அவர், இதனை பொருளாதார முன்னேற்றத்தைப் பார்க்கிலும் பண்பாட்டுக் கோட்பாடுகள் ஊடாக அளவிட முடியுமென்பதனால் இதற்கு அதிக முக்கியத்துவத்தை கொடுக்கின்றார்.

சிறந்த ஆட்சியொன்றுக்காக சுயநலம்மிக்க சிறுபான்மை அல்லது சுயநலம்மிக்க பெரும்பான்மை வெற்றியடையாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும். அரசியலமைப்பின் ஊடாக அரசாங்கத்தை நடாத்துவதற்காக நேர்மறையான அதிகாரத்தை ஒப்படைக்காமல் அவர்களது மிகவும் முக்கியமான தேவைகள் ஆபத்துக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை கட்டுப்படுத்துவதற்காக அவர்களுக்கு மறுதளிக்கும் (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காக எதிர்மறையான அதிகாரத்தை வழங்குவதைப் பார்க்கிலும் சிறந்த ஆட்சி முறை பண்பாட்டுவாதம் (ஒழுக்க நெறிவாதம்) என கருத்துத் தெரிவிக்கும் பேராசிரியர் ஆனோல்ட் டொயின்பி சுட்டிக்காட்டுகையில், சிறப்பு ஆற்றல்களைக்கொண்ட, மக்களைப் பற்றிய உணர்வுகளைக் கொண்ட மனிதர்கள் மனிதாபிமானத்தின் வீழ்ச்சிக்கு உட்பட முடியுமாகையினாலும், அதனூடாக அவர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய முடியுமாகையினாலும் பண்பாட்டுவாதத்தை பொது மக்கள் கட்டுப்பாட்டிலிருந்து நீக்குதல் வேண்டும் என்றார். (செழிப்பான வாழ்க்கைக்கான உரையாடல்கள், பக்கம் 291)

அரசாட்சி சம்பந்தமாக முடியாட்சி வரலாற்றில் தீவிரப்போக்கு சிந்தனை சவாலுக்குட்பட்டமையினால் முடியாட்சி முறைக்குப் பதிலாக சில்லோராட்சி முறை அதாவது சிறுபான்மை ஆட்சி முறை ஜனநாயகத் தன்மையை பிரதிபலித்தது. பிரபுத்துவ ஆட்சியாளர்கள் அவர்களது குலத்திற்கமைய நியமிக்கப்பட்டனர். மதத்தினது அதிகாரத்தின் அடிப்படையில் மதகுருமார்கள் நியமிக்கப்பட்டனர். ஜனநாயக ஆட்சியாளர்கள் பணப்

பலத்தினால் நியமிக்கப்பட்டனர். இது சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும் பேராசிரியர் கார்லோ பொன்சேக்கா அவர்கள்,"வயதுக்கு வந்தோருக்கான சர்வஜன வாக்குரிமையின் அடிப்படையில் ஜனநாயகம் என்பது, மனித வரலாற்றில் சுமார் ஒரு நூற்றாண்டைப் பார்க்கிலும் குறைந்த காலத்தைக் கொண்ட ஆட்சி முறையெனவும், கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கினால் ஒரு நபருக்கு ஒரு வாக்கு எனும் கோட்பாட்டின் அடிப்படையிலான ஜனநாயகம் அரசியல் சமவுரிமைக்கு அர்ப்பணிக்கப்பட்டது" எனவும் கூறுகின்றார். ஆனாலும் நடைமுறையில் செல்வத்தின் அடிப்படையில் உச்சளவு சமமின்மைகள் நிலவும் சமூகங்களில் ஜனநாயக ஆட்சியாளர்கள், அவர்களிடம் பொருளாதார பலத்தின் அடிப்படையிலேயே அதிகளவில் தெரிவு செய்யப்படுகின்றனர் என்றார்." மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "ஜனநாயக நாடொன்றின் வாக்காளர்களின் பெரும்பான்மையானோர் முதலாளித்துவ வர்க்கத்தை சாராதவர்களாக இருந்தாலும் தேர்தலூடாக நியமிக்கப்படும் நாட்டின் ஆட்சியாளர்களில் அதிகமானோர் முதலாளித்துவ வர்க்கத்தை சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அதற்குக் காரணம் செல்வத்தின் அடிப்படையில் பாரிய சமத்துவமின்மை நிலவும் சமூகத்தில் செல்வந்தர்கள் தமது செல்வத்தின் ஒரு பகுதியை பெரும்பான்மையான வாக்காளர்களின் வாக்கைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுவதாகும்." என வலியுறுத்துகின்றார்.

ஜனநாயகம் பற்றிய கலந்துரையாடலின்போது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் என்னவெனில், அனைத்து மனிதர்களுக்கும் ஒரே அளவில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தை உடனடியாக நிறைவேற்ற முடியாதென்பதாகும். ஆனாலும் செய்ய முடியுமான மற்றும் செய்ய வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக துரித கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதாகும்.மனித சமூகத்தின் நிலைத்திருப்பு மீது உலகளாவிய ரீதியில் நிலவும் சிக்கலான பிரச்சினைகள் சம்பந்தமாக எமது பங்களிப்பு எவ்வாறானது, எமது உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, ஆடையணிகள், தொழில் வாய்ப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் தொடர்பாக முறையான திட்டமிடல்கள் இருத்தல் வேண்டும்.பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்ட மனிதர்கள் தமது திறமைகளை மேம்படுத்தி சுதந்திரமாக கருத்துத் தெரிவிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கையை செழிப்பானதாக்குவதற்கான முயற்சியை மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பிலிருந்து விடுபடுதல் ஜனநாயகத்தை பாதுகாப்பதாக இருக்காது.

பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றி கலந்துரையாடும்போது, "சட்டத்தின் சாராம்சம்" எனும் நூலானது உலகிற்கு முக்கியமான வரைவிலக்கணமொன்றை இற்றைக்கு சுமார் 1700 வருடங்களுக்கு முன்னரே முன்வைத்துள்ளது. அதாவது, அரசாங்கமொன்றின் முக்கிய அதிகாரங்களான சட்டம், நிர்வாகம், நீதி போன்ற முத்துறைகளும் ஒன்றிலிருந்தொன்று பிரிந்து தனித்தனியாக செயற்பட வேண்டுமென பிரான்ஸின் அரசியல் தத்துவவியலாளரான சார்ள்ஸ் மொன்டெஸ்கிவ் 1784 ஆம் ஆண்டில் 'ஸ்பிரிட் ஒப் லோ' எனும் நூலில் கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைப்படுத்தலுடனான (ஒன்று ஒன்றை விஞ்சிச் செல்ல முடியாதவாறு) ஆட்சி ஜனநாயகத்துக்கு மிகவும் உகந்ததெனத் தெரிவித்துள்ளார்.

சம கால சமூகப் பின்னணியை ஆராய்ந்த பேராசிரியர் தென்னகோன் விமலானந்த அவர்கள், முறையாக தயாரிக்கப்பட்ட சட்ட ஒழுங்குவிதிகள் எமது நாட்டில் இல்லையெனவும், 1832 ஆம் ஆண்டு வரையும் குறித்துரைக்கப்பட்ட பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நாடு ஆட்சி செய்யப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். "வெளிநாட்டவர் எமது நாட்டின் சட்டத்தை உருவாக்குபவர்கள் மூலமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் கருத்துக்களை முன்வைத்துள்ளதாகவும், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட மொழி சிங்களம் எனக் கூறுவதற்கு முடியாதெனவும்,சிலர் அதிகாரத்தில் இருக்கும் நோக்கில் நாட்டின் முன்னேற்றம் பற்றி கடுகளவும் சிந்திக்காமல் பல்வேறுபட்ட பிரச்சினைகளை முன்னிறுத்தியவாறு அரசியல் இறங்குகின்றனர். அதனால் ஒருபோதும் எவருக்கும் நன்மை கிடைக்காது." எனவும் குறிப்பிட்டுள்ளார். கோல்புரூக் சீர்திருத்தங்களின் பெறுபேறாக 1833 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதன் மூலம் இலங்கை மக்களுக்கு நாட்டின் நிர்வாக முறையில் ஏதோவொரு விதத்தில் பங்குபற்றுவதற்கு முடியுமாகியது. அதன் பின்னர் இடைக்கிடை மேற்கொள்ளப்பட்ட சீர்சிருத்தங்களின் ஊடாக நாட்டின் நிர்வாக முறை மாற்றத்திற்குட்பட்டது. 1920 இல் 16 தேர்தல் மாவட்டங்கள் எனவும், 1931 இல் டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கைக்கமைய அரசாங்க சபை 58 ஆசனங்களைக் கொண்டதாக இருந்தது. அதில் 50 ஆசனங்கள் ர்வஜன வாக்குரிமை மூலமாகவும் மீதி 08 ஆசனங்களை ஆளுநர் மூலமாகவும் நியமிக்கப்பட்டதுடன், மேலே குறிப்பிடப்பட்ட 50 ஆசனங்கள் நிலப் பரப்பளவுக்கமைய அதாவது சனத்தொகையில் 75,000 இலும் குறையாததும் 100,000 - 125,000 இற்கிடைப்பட்ட எண்ணிக்கைக்கு ஒரு ஆசனம் என்ற என்ற ரீதியில் ஒதுக்கப்பட்டிருந்தது. (முதலாவது கு யரசு யாப்பின் முதலாவது யாப்புத் திருத்தத்திற்கமைய, ஒரு தேர்தல் தொகுதிக்கான சனத்தொகையின் எண்ணிக்கை 75000 இலிருந்து 90000 வரை அதிகரிக்கப்பட்டது.) 1930 ரொபட் விலியம் லயல் கிராண்ட் ஆணைக்குழுவுக்கமைய 50 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.1931 யூலை மாதம் நடைபெற்ற அரசாங்க சபை தேர்தலின் போது 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்தமை முக்கியமான விடயமாகும். (1959 இன் 11 ஆம் இலக்க தேர்தல் திருத்தச் சட்டத்திற்கமைய வாக்களிக்க முடியுமான வயதெல்லை 21 இலிருந்து 18 வயதாகக் குறைக்கப்பட்டது.) 1946 சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக இலங்கையில் பாராளுமன்ற முறையிலான அரசாங்கமொன்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 89 தொகுதிகளுக்காக 95 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதுடன், 06 நியமன உறுப்பினர்களுடன் மொத்த எண்ணிக்கை 101 ஆக இருந்தது. இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய சனத்தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றியமைத்துக் கொள்ள முடியுமான வகையில் அனைத்து குடிசன மதிப்பீட்டுக்குப் பின்னரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய 1954 விஜயவர்தன ஆணைக்குழு பரிந்துரைகள் (105 ஆசனங்களாக மாற்றியமைத்தல்) நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1959 தல்கொடபிட்டிய ஆணைக்குழு அறிக்கைக்கமைய தேர்தல் தொகுதிகளை 145 ஆகவும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 151 ஆகவும் அதிகரிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. 'நிலப் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு 25 உறுப்பினர்கள் மற்றும் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு 126 உறுப்பினர்களையும் ஆளுநரால் 06 உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டதுடன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 157 ஆக இருந்தது. இதற்கமைய 1970 ஆம் ஆண்டு வரை தேர்தல்கள் நடாத்தப்பட்டன. 1972 குடியரசு யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கமைய பாராளுமன்றம் தேசிய அரச பேரவையாக பெயர் மாற்றப்பட்டதுடன், 1976 நொயெல் தித்தவெல்ல ஆணைக்குழு அறிக்கைக்கமைய அதுவரை காணப்பட்ட 145 தேர்தல் தொகுதிகள் 06 பல உறுப்பினர் ஆசனங்களுடன் 160 வரைஅதிகரிக்கப்பட்டதுடன், அந்த தேர்தல் தொகுதிகளிலிருந்து 168 உறுப்பினர்களை நியமித்துக் கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அந்த 06 பல் உறுப்பினர் தொகுதிகளில் 04 தொகுதிகள் இரு உறுப்பினர்களைக் கொண்டவையாகவும் 02 தொகுதிகள் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொகுதிகளாகவும் இருந்தன.

குடியரசு யாப்புச் சீர்திருத்தத்திறகமைய சனத்தொகையின் அனைத்து தொண்ணூறாயிரம் பேருக்கும் ஒரு ஆசனம் மற்றும் நிலப் பரப்பில் அனைத்து 1000 சதுர மைல்களுக்கும் ஒரு மேலதிக தேர்தல் தொகுதி என ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. இங்கு நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு 25 உறுப்பினர்களும், 1971 சனத்தொகை கணக்கெடுப்புக்கமைய சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்து கொள்ள வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 143 ஆக இருந்தது. 1977 தேர்தலின்போது இது பயன்படுத்தப்பட்டது.1978 இரண்டாவது குடியரசு யாப்பு ஊடாக விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்துகொள்ளப்படும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 196 ஆகும். அதாவது, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு 22 தேர்தல் மாவட்டங்களிடையே வருடாந்தம் பிரித்து ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கை 160 ஆகும். 36 ஆசனங்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்படும் பிரகாரம் ஒரு மாகாணத்திற்கு 04 ஆசனங்கள் வீதம் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த, மாகாணத்தை அடிப்படையாகக்கொண்ட ஆசனங்கள் ஊடாக நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட ஆசனங்களை ஒதுக்கும் முறை இரத்துச் செய்யப்பட்டது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட 196 உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக தேசிய பட்டியல் முறையின் கீழ் 29 ஆசனங்கள் உட்பட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக அதிகரிக்கப்பட்டது. 1988 ஆம்

ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கான 14 ஆவது திருத்தத்திற்கமைய தேர்தல் மாவட்டங்கள் பிரிப்புக்கமைய (05 ஆவது எல்லை நிர்ணயம்) 03 தேர்தல் வலயங்களின் கீழ் 20 இற்கும் அதிகமான உறுப்பினர்களை தெரிவு செய்துகொள்வதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1988 திசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கான 15 ஆவது திருத்தத்திற்கமைய 14 ஆவது திருத்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் இரத்துச் செய்யப்பட்டது. 15 ஆவது சட்டத்தின் பெறுபேறாக 1981 ஆம் ஆண்டின் எல்லை நிர்ணயம் மீண்டும் மீளமைக்கப்பட்டது. 1978 அரசியலமைப்புச் சட்டத்தினூடாக ஒற்றை வாக்கெடுப்பு முறை இரத்துச் செய்யப்பட்டதுடன் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 196 உடன் தேசிய பட்டியல் மூலமாக தெரிவு செய்யப்படும் 29 உறுப்பினர்களுடன் மொத்தம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் நியாயமற்ற வகையிலான பெண்கள் பிரதிநிதித்துவம் இங்கு குறிப்பிட முடியுமான விசேட விடயமொன்றாகும்.

பாராளுமன்ற ஜனநாயக முறை நிலவும் 190 நாடுகளின் பெண்கள் பிரதிநிதித்துவத்தை கவனத்திற்கொள்ளும்போது இலங்கை 176 ஆவது இடத்தில் காணப்படுகின்றது. இம்முறை (2020) பாராளுமன்றத் தேர்தலின்போது வாக்கெடுப்பின் மூலமாக 08 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியலின் மூலமாக 04 பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சதவீதத்தில் நோக்கும்போது அது சுமார் 5.3 சதவீதமாகும் ஆகும். விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் 1989 பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் முதல் 2020 வரை நடைபெற்ற 08 பொதுத் தேர்தல்களின் பெறுபேறுகளுக்கமைய உச்சளவு பெண்கள் பிரதிநிதித்துவம் 13 மாத்திரமாகும்.

எமது சர்வஜன வாக்குரிமைக்கு தொண்ணூறு (90) வருடங்களைப் போன்றே பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு எழுபத்து மூன்று (73) வருட வரலாறு உண்டு. புள்ளடியின் பலத்தினால் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மக்களின் அபிலாஷைகள் மீது கவனம் செலுத்தும் விதம் உலக அரசியல் அரங்கிலும் பல்வேறுபட்ட கலந்துரையாடலுக்குட்பட்டுள்ள விடயமாகும். விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் மாத்திரமன்றி ஆரம்ப கட்டங்களிலும்கூட சில அரசியல் செயற்பாடுகள் சம்பந்தமாக விமர்சனங்கள் காணப்படுவதாக வரலாறு சான்று பகர்கின்றது.மக்களுக்கு அதிகாரத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது. சமூக மூலதனத்தை கவனத்திற்கொள்ளாதிருத்தல் எந்தளவுக்கு சோகத்திற்குரிய விடயமாகும். அநேகமான செயற்பாடுகள் சமூகத்தில் காண்பிக்கப்படுவதனைப் பார்க்கிலும் நடைமுறையில் நிரூபிக்கப்படுகின்றன. நாட்டின் செல்வத்தின் கணிசமான ஒரு பகுதியை தவறான முறையில் அனுபவித்தல் போன்ற விடயங்களின்போது சுய ஒழுக்கம் பற்றி சமூகத்தில் பேச முடியுமாக இருப்பதற்கான உண்மையான காரணம் ஜனநாயகமேயாகும். தற்போதைய இலங்கைப் பாராளுமன்றம் முகங்கொடுக்கும் ஒரு சவால் என்னவெனில், பலவீனமான எதிர்க் கட்சிக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாகும். எதிர்க் கட்சியின் சவாலுக்கு முகங்கொடுத்து நடவடிக்கை மேற்கொள்ளும்போதே ஆளுங் கட்சிக்கு மிகவும் பலம்மிக்க வகையில் நடவடிக்கை மேற்கொள்ள முடியும். பிரேரிக்கப்படும் அலுவல்களை தரமாகவும், அளவான ஆய்வுக்கும், விமர்சனத்திற்கும் உட்படுத்துவதே பலம்மிக்க எதிர்க் கட்சியின் கடமையாக இருத்தல் வேண்டும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டால் அனைத்து விடயங்களும் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும்.

***சுதந்திர எழுத்தாளர்.**

**உசாத்துணை நூல்கள்**


- சாமயென் யுத்து ஸ்ரீ லங்காவக் சந்தஹா (சமாதானம் நிலவும் இலங்கைக்காக) - பேராசிரியர் கார்லோ பொன்சேக்கா
- சரு திவியட்ட சம்பாஷனயக் (செழிப்பான வாழ்க்கைக்கான உரையாடலொன்று) - மொழி பெயர்ப்பு, சந்திரசிரி பல்லியகுரு
- ரட்ட பெதன யோஜனாவலட்ட அப விருத்தவியயுத்தே எய்? (நாட்டைப் பிரிக்கும் முன்மொழிவுகளை நாம் ஏன் எதிர்க்க வேண்டும்?) - சட்டத்தரணி சரத்சந்திர தர்மசிரி
- த்ரவிட முன்னேற்றக் கழகம் வ்யாபாரய ஹா சிங்ஹலயாகே அனாகதய (திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் மற்றும் சிங்களவர்களின் எதிர்காலம்) - பேராசிரியர் தென்னகோன் விரலானந்த
- லங்காவே ராஜான்டு யான்த்ரனய (இலங்கையின் முடியாட்சிப் பொறிமுறை) - உபாலி குணசேக்கர (பகுதியொன்று எடுக்கப்படவில்லை)
- பெரதிக இத்தியாசய (கீழைத்தேய வரலாறு) - வீ.டீ.எஸ்.குணவர்தன
- சர்வஜன வாக்குரிமை - தேர்தல் ஆணைக்குழு
- பிரித்தானிய ஒலிபரப்புச் சேவை (பீபீசீ)


## 2020 பாராளுமன்றத் தேர்தலின் விசேட நிகழ்வுகள்



பாராளுமன்றத் தேர்தலின் வாக்கெண்ணல் செயற்பாடுகள் சம்பந்தமாக தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வு




தேர்தல் காலப் பகுதியில் சுகாதார வழிகாட்டல்கள் சம்பந்தமாக உள்ளூர் அதிகார சபைகளின் அலுவலர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வு



தடித்த அட்டையினாலான (கார்ட்போர்ட்) வாக்குப் பெட்டிகளை இலச்சினையிடுதல் மற்றும் வாக்கெண்ணும் தினம் வரை பாதுகாப்பாக வைக்கும் முறை சம்பந்தமாக அறிவுறுத்தும் நிகழ்வு



நடாத்தப்பட்ட மாதிரி வாக்கெடுப்பு நிகழ்வுகள்




# மேற்கூறிய எதுவும் இல்லை

**தரணி உபேக்கா வீரசேக்கர**
**உதவி ஆணையாளர் (சட்டம்)**

அலுவலகத்தின் உயரமான கண்ணாடி யன்னல் ஊடாக கீழே பார்த்த அவளுக்கு நுழைவாயிலின் முன்னே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெளிவாகத் தெரிந்தனர். வன்முறை உணர்வுடன் நடந்துகொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு பாரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்திய நிர்வாக சேவையின் சிரேட்ட அதிகாரியான அர்ச்சனா கபூரின் காதுகளில் இந்த பெரிய சத்தம் விழுந்தது.

"பிரதாப்! என்ன பிரச்சினை" மூச்சிரைத்தவாறு படிக்கட்டுக்களில் ஏறிவரும் வயதான எழுதுநரிடம் (கிளார்க்கிடம்) அர்ச்சனா கேட்டார்.

"அவர்கள் தேர்தல் முறையில் மாற்றமொன்றைக் கோருகின்றார்கள். அவர்களுடைய பிரதிநிதி ஒருவருக்கு மேடத்தை சந்திக்க வேண்டுமாம்."

அனுபவம் வாய்ந்த நிர்வாக சேவை அதிகாரியான அர்ச்சனாவுக்கு இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டங்கள் பழக்கப்பட்டவையே. மாற்றமொன்றுக்காகப் போராடுபவர்கள் மீது சிறு வயது முதலே அவர் ஈர்க்கப்பட்டிருந்தார். சரி, பொறுங்கள். நான் போகிறேன். நாம் அவ்விடத்திற்குப் போய் கதைப்போம். வேண்டாம், வேண்டாம். மேடம் போக வேண்டாம். அவர்கள் யாரென்று எமக்குத் தெரியாதல்லவா?. மேடமுக்கு ஏதாவது தீங்கு ஏற்படலாம். எழுதுநரின் முகத்தில் பயத்தின் அடையாளம் தெரிந்தது. ஆனாலும் அர்ச்சனா கபூரின் முகத்தில் பயத்தின் சாயலே இருக்கவில்லை.

அவர் தனது சாரியை சரி செய்துகொண்டு இருக்கையிலிருந்து எழுந்தவுடனேயே வயதான எழுதுநர் அவரை வழி மறித்தார். "மேடம் போக வேண்டாம். நான் அவர்களுடைய தலைவரை இங்கு அழைத்து வருகின்றேன்."
அவரது தயவான கோரிக்கையை எதிர்க்க முடியாததன் காரணமாக அவர் தனது இருக்கையில் அமர்ந்தார். அவரது கண்கள் புத்தக இராக்கையில் காணப்பட்ட ராதா – கிருஷ்ணா உருவப் படத்தின் மீது பதிந்தது. பாதியளவு மூடியிருந்த கிருஷ்ணனின் நீண்ட கைவிரல்கள் புல்லாங்குழல் மீது இருந்ததுடன், ராதா தீராத காதலுடன் தனது காதலனின் தோலின் மீது தலையை வைத்திருந்தாள். ஆனாலும் திருமணமாகாமல் நடுத்தர வயதையும் கடந்துகொண்டிருக்கும் அர்ச்சனாவின் வாழ்க்கையில் கிருஷ்னண் ஒருவனுக்கு இடமிருக்கவில்லை.

ஆர்ப்பாட்டக் குழுவின் தலைவன் அவரது நினைவலைகளை சிதைத்தவாறு அர்ச்சனாவின் அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான்.

"நான் ஷங்கர். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை எமது பிரஜைகள் அமைப்பினால் ஏற்பாடு செய்து வழி நடாத்துகின்றோம்."

கனமான மீசையினால் மூடப்பட்டிருந்த அவனது முகம் அழுக்கான தோற்றத்தைக் காட்டியது. வியர்வையினால் முழுமையாக நனைந்திருந்த சட்டை பொத்தான்களில் இரண்டு திறந்திருந்தது. சரியாக வாரிவிடப்படாதிருந்த அவனது தலை மயிர் இடைக்கிடை பழுத்து வெள்ளி நிறமாக மாறியிருந்தது. ஆனாலும் அவனது நேரான மூக்கும் கூர்மையான கண்களும் பழக்கப்பட்ட முகமாகத் தெரிந்தது.

"அமருங்கள் ஐயா, உங்களுடைய அமைப்பின் கோரிக்கை யாது?"
" வேட்பாளர்கள் எவரையும் வாக்காளர்கள் விரும்பாவிட்டால் அந்த விருப்பத்தை அடையாமிடுவதற்கு வாக்குச் சீட்டில் ஒரு இடத்தை ஒதுக்கித் தருமாறு நாம் கோருகின்றோம்."

"ஆஹா! நீங்கள் கோருவது NOTA அல்லது None of the above வசதியை அல்லவா?"
"ஆமாம்! அப்போது, நாம் எந்தளவுக்கு வேட்பாளர்களை விரும்பவில்லை என்ற விடயத்தை தெளிவாக உணர்த்துவதற்கு முடியுமல்லவா?"
"ஆனாலும் அதனால் ஏதும் பிரயோசனம் இருக்கின்றதா?" அர்ச்சனா திருப்பிக் கேட்டார். "ஏன் இல்லை! அதனால் அனைவருக்கும் நன்மை கிடைக்கும்."

"அதனால் பிரஜையொருவருக்கு கிடைக்கும் பயன் என்ன?"
"அதனை உங்களுக்கு சரளமான உதாரணமொன்றின் மூலம் தெளிவு படுத்துகின்றேன். எமது பல்கலைக்கழகத்தில் எம்முடன் அழகான பெண் பிள்ளையொருத்தி கற்றாள். அக்கால கட்டத்தில் பல்கலைக்கழகத்தில் பயிலும் பல இளைஞர்கள் அவளை காதலிப்பதாகத் தெரிவித்தனர். ஆனாலும் அந்தப் பெண் பிள்ளையின் பதில், "மேற்கூறிய எதுவுமில்லை" என்பதாக இருந்தது. அதனால் அந்த இளைஞர்கள் எவரதும் குணத்தை, இயல்பை அந்தப் பெண்பிள்ளை விரும்பவில்லை எனத் தெரிந்து கொண்டார்கள். வாழ்க்கையின் எந்தவொரு பாரதூரமான விடயத்தையும் புரிந்து கொள்ளாமல் வாழ்ந்த அந்த இளைஞர்கள் தற்போது தமது வாழ்க்கையை மாற்றியமைத்து வாழ்க்கையில் வெற்றிபெற்றுள்ளார்கள்."

"கடவுளே? ஷங்கர் உமாகாந்த்! இது நீங்களா?" அர்ச்சனா சிங் நிசப்தத்தைக் கலைத்துவிட்டு இறுதியில் பேசினார்.

"ஆம், இப்போது நான் பேராசிரியர் ஷங்கர் உமாகாந்த், இவையனைத்துக்கும் காரணம் NOTA ஆகும். அதனால் இம்முறையாவது எனது கோரிக்கை மீது கவனம் செலுத்துங்கள். தொழிலிலும் வாய்ப்புக்களின் போதும் பின்னர் வருத்தப்பட வேண்டியேற்படும் தீர்மானங்களை எடுக்க வேண்டாம்."

**ஆலோசனைக் குழு**
மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜீவன் எச். ஹூல்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க
எச். எம். ரீ. டி. ஹேரத்
ரசிக்க பீரிஸ்

**தொகுப்பாசிரியர்** - சன்ன பீ. த. சில்வா
**கணினிப் பக்க வடிவமைப்பு** - அமில கமகே
**அச்சுப் பதிப்பு** - அரசாங்க அச்சகம்
**வெளியீடு** - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு
தேர்தல் ஆணைக்குழு

**உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் எமக்கு எழுதுங்கள்**

தொகுப்பாசிரியர் – "புள்ளடியின் பலம்"
தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை

ISSN-2706-0055

(+94)112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka

இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் வெளிப்பாடன்று.